**New Beacon Study Centre**
உடுப்பிட்டி
S. B ஐயர் அவர்களின்
ஆங்கில வகுப்புக்கள்
**7-9-82 ஆரம்பமாகிவிட்டன**
இடத்துக்கு முந்துங்கள்
1983– ஆண்டுக்கான சகல
வகுப்புகளும் நடை பெறுகின்றன
நிர்வாகிகள்
4471

விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 24 ஆவணி 23 ஜூலகம் 19 இதழ் 207
யாழ்ப்பாணம் புதன்கிழமை 8—9—82

## இந்திய செய்மதி செயலிழந்தது!

புதுடில்லி, செப். 7
பெருமளவு பணச்செலவில் ஏழுவருடங்களுக்கு விண்வெளியில் சஞ்சரிக்க இந்தியா ஐந்து மாதங்களுக்கு முன் அனுப்பி வைத்த செய்மதி செயலிழந்துவிட்டதாக இன்று அறிவிக்கப்பட்டது

புளோறிடாவிலிருந்து இச்செய்மதியை அனுப்ப 1' கோடி 20 ஆயிரம் டாலர் செலவானது.

இந்தப்பெருந்தோல்வி இந்தியாவுக்கு இனி விண்வெளி ஆராய்ச்சியைத் தொடரமுடியாத ஒரு நிலையை ஏற்படுத்தியுள்ளதாக கருத்துத்தெரிவிக்கப்படுகிறது.

# ★ யாழ். மாவட்டத்தில் 4,93,711 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றனர்

(யாழ்ப்பாணம்)
**ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்கயாழ்ப்பாண மாவட்டத்தில் 4,93,711 பேர் தகுதி பெற்றுள்ளனர்.**

யாழ். மாவட்டத்தில் மொத்தம் 436 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவிருக்கிறது கிளிநொச்சித் தொகுதியிலேயே கூடுதலான வாக்களிப்பு நிலையங்கள் இருக்கும்.

வாக்களிப்பு நிலையங்கள் வருமாறு: ஊர்காவற்றுறை 38 வட்டுக்கோட்டை, 45, காங்கேசன்துறை 44, மானிப்பாய் 44, கோப்பாய் 43, உடுப்பிட்டி 36, பருத்தித்துறை 25, சாவகச்சேரி 41, நல்லூர் 34, யாழ்ப்பாணம் 28, கிளிநொச்சி 48. வாக்களிப்பு நிலையங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களை தெரிவுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. [க]

## பஸ் விபத்தில் குழந்தை பலி!

(யாழ்ப்பாணம்)
பஸ்விபத்தொன்றில் சிக்கிய இரண்டரை வயதுக்குழந்தை மூளைசிதறி ஸ்தலத்திலேயே பலியானது.

புத்தூரைச்சேர்ந்த இரத்தினம் குணசீலன் எனும் குழந்தையே விபத்தில்பலியானது.

சுன்னாகத்திலிருந்து சாவகச்சேரிக்குச் சென்றுகொண்டிருந்த பஸ், புத்தூரைத் தாண்டிச்செல்லும் போழுது ஏதோ சத்தம் கேட்டதாகவும் பஸ் சாரதி பஸ்ஸை நிறுத்திவிட்டுப் பார்த்த பொழுது பஸ் பின்பக்கமாக மூளைசிதறிய நிலையில் குழந்தை இறந்து கிடக்கக் காணப்பட்டதாகவும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

குறிப்பிட்ட பஸ் கோண்டாவில் டிப்போவைச் சேர்ந்தது.

பதில் நீதவான் எஸ். அ[illegible]ர்தலிங்கம் மரணவிசாரணை நடத்திய பின்னர், விபத்து மரணமென த்தீர்ப்பளித்து பஸ்சாரதி சின்னத்துரை விசுவலிங்கம் என்பவரை இம்மாதம் 14ம் திகதிவரை றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார்

சுன்னாகம் பொலிஸ்நிலைய சார்ஜன்ட் பொ. பரமானந்தன் சாட்சிகளை ஆஜர் செய்தார். (மா)

## புள்ளடிக்குப் பதிலாக இலக்க முறை

(யாழ்ப்பாணம்)
ஜனாதிபதி தேர்தல் சட்டத்திபடி பழைய புள்ளடி முறைக்குப்பதிலாக வாக்குச்சீட்டுகளில்அபேட்சகர்களின் பெயருக்கு எதிரே வாக்காளர் இலக்கங்களை மட்டுமே எழுதவேண்டும்.

ஜனாதிபதி தேர்தலில்இருவர் மட்டும் போட்டியிட்டால், தனிய ஒருவருக்குமட்டும் I என்ற இலக்கத்தை எழுதி வாக்களிக்கவேண்டும் சட்டத்தின்படி. பழைய புள்ளடிபோடும்முறை இருக்காது.

3 பேர் போட்டியிட்டால் வாக்காளர் 2 பேருக்கு வாக்களிக்க முடியும், தங்களுக்கு விருப்பமான இரு அபேட்சக

(8-ம் பக்கம் பார்க்க)

## நிறைவேறியது

(கொழும்பு)
அபிவிருத்தி திருத்தச்சட்டமூலம் பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பின்றி நேற்று நிறைவேறியது.

பாராளுமன்றம் இன்று பிற்பகல் மீண்டும் கூடும்.

## தபால்மூலம் வாக்களிப்பு: 9-வரை விண்ணப்பங்களை அனுப்பிவைக்கலாம்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் தேர்தல் அலுவலகத்துக்கு நேற்றுக் காலை ஆயுதந்தாங்கிய இராணுவத்தினரும், கடற்படையினரும், வந்திருந்தனர்.

வாக்காளர் இடாப்புகளை பரிசீலனை செய்து, தபால் வாக்களிப்புக்கான விண்ணப்பம் செய்வதற்காகவே இவர்கள் வந்திருந்தனர். அரசாங்க ஊழியர்களும், தபால் வாக்களிப்புக்கான விண்ணப்பங்களை கொடுக்க வந்திருந்தனர்

இலங்கையிலுள்ள சகல தேர்தல் மாவட்டங்களின் வாக்காளர் இடாப்புக்களும் அங்கு வைக்கப்பட்டிருந்தன.

தபால் மூலம் வாக்களிக்க விரும்புவோர் இம்மாதம் 9-ம் தேதி நள்ளிரவு 12 மணிவரை விண்ணப்பிக்கலாம் இதற்கு வசதியாக யாழ்ப்பாணம் தேர்தல் கந்தோர் 9ம் திகதி நள்ளிரவு 12 மணிவரை திறந்திருக்கும். (க)

## ★ வேலை நிறுத்தம் செய்த பரந்தன் ஊழியர் 10-ல் வேலைக்குத் திரும்புவர்!

### சமரச ஒப்பந்தம் கைச்சாத்து

(கொழும்பு)
கடந்த ஒன்பது மாதகாலமாக வேலைநிறுத்தத்திலீடுபட்டிருந்த பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன ஊழியர்கள் வரும் பத்தாம் திகதி வெள்ளிக்கிழமைகாலை பத்து மணிக்கு வேலைக்குத் திரும்புகிறார்கள்.

நேற்று முன்தினம் கொழும்பு தொழில ஆணையாளர் ஏ. எல். பி. கே.பெரேரா முன்னிலையில் இரசாயனக்கூட்டுத்தாபன நிர்வாகத்துக்கும், தொழிற்சங்கங்களுக்கும் இடையே செய்யப்பட்ட சமரச ஒப்பந்தத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டது.

நாராயன்பிட்டியாவிலுள்ள தொழில் அமைச்சின் செயலகத்தில் இச்சமரச ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இப்பேச்சுவார்த்தையின் போது இரசாயனக் கூட்டுத்தாபன நிர்வாகத்தின் சார்பில் கூட்டுத்தாபனத் தலைவர் திரு. யப்பேவ அபயவர்த்தனவும், இலங்கை வர்த்தக ஊழியர்

[8-ம் பக்கம்பார்க்க]

## ஹெக்டர்தான் ஸ்ரீ.சு.க. வேட்பாளர்

(கொழும்பு)
ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் (சிறிமாவோபிரிவு ஜனாதிபதி வேட்பாளராக திரு. ஹெக்டர் கொப்பேகடுவ போட்டியிடுவார் என்று நேற்றுஉத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

கட்சியின் தலைமையகத்தில் நடந்த மத்தியகுழுக்கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக தலைமையகத்திலிருந்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தமுடிவு கடந்த மாதம் 11ந் திகதியே எடுக்கப்பட்டதாக அந்த அறிக்கை மேலும் தெரிவிக்கிறது.

நேற்றைய 'ஈழநாடு' பதிப்பில், சிறிமா அணிசார்பில் திரு. ஹெக்டர் கொப்பேகடுவதான் தெரிவுசெய்யப்பட்டுள்ளார் என்ற செய்தியை முன்கூட்டியேதந்தது தெரிந்ததே.

## "அபிவிருத்தி-கிராமோதய-பிரதேச சபைகளின் நடவடிக்கைகளை ஒருமுகப்படுத்துவதே நோக்கமாகும்"

### பாராளுமன்றத்தில் பிரதமர்

(கொழும்பு)
"அபிவிருத்தி சபைகள், கிராமோதயசபைகள் பிரதேசசபைகளின்நடவடிக்கைகளைஒரு முகப்படுத்துவதே இத்திருத்தச்சட்டமூலத்தின் நோக்கம்" என்று பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா நேற்று பாராளுமன்றத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

பாராளுமன்றம் பிற்பகல் மூன்று மணிக்குக்கூடியபோது, ஒருமுகப்படுத்தும் திருத்தச் சட்ட மூலத்துக்கான இரண்டாவது வாசிப்பு மீதான விவாதம் ஆரம்பமானது பிரதமர் இவ்விவாதத்தை ஆரம்பித்து வைத்துப்பேசினார்.

பிரதமர் தமதுரையில் குறிப்பிட்டதாவது:

"அபிவிருத்திசபைகளின் நடவடிக்கைகளைப் பன்முகப்படுத்துவதன் மூலமே உண்மையான சேவையைப்பெற முடியும். இச்சட்டத்தின்மூலம் இது சாத்தியமாகும். அபிவிருத்தி நடவடிக்கைகளை மாகாணங்களில் எடுக்கும் போது அதிகாரிகளுக்குச் சில கஷ்டங்கள் ஏற்படுகின்றன. இவ்வித கஷ்டங்களை நீக்குவதும் இச்சட்டமூலத்தின் நோக்கமாகும்"

8-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

முந்திரிகைப்பழம் உடனடியாகவும், மொத்தமாகவும் விற்பனைக்கு உண்டு தொடர்பு கொள்ளவும். M. நடராஜா. சுவர்ணலதா பவனம், தெணியம்பைத் தெரு, வல்வெட்டித்துறை. 4460

ஒரே பாவனையிலுள்ள 6 ஸ்ரீ 2440 பேஜோ சபாரி மாடல் கார் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: சோமானந்த வாசா, மாகிய பிட்டிச் சந்தி 4462

தஞ்சாவூர் புதிய வீணைகள் மலிவு விலையில் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள். சி கிருஷ்ணமூர்த்தி, திருமுறை மன்றம், 31/12, சங்கிலியன் வீதி, நல்லூர். 4450

புனரமைக்கப்பெற்ற C. 90, C 70. C 50. CD 125 மோட்டார் சைக்கிள்களும் Delica 1979 மொடல் வானும் விற்பனைக்குண்டு மற்றும் எந்த விதமான வாகனமும் குறைந்த விலையில் நேரடியாகத் தருவித்துக் கொடுக்கிறோம். நா சாம்பசிவம் அன் கோ, 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் 4453

யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாக வீதிக்கு அண்மையில் சீனியர் ஒழுங்கையிலுள்ள 2 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு கீழே உள்ள விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். மினி சென்ரர், இல. 3. ஸ்ரான்லி ரோட், (விடோ தியேட்டர் எதிர்ப்புறமாக) யாழ்ப்பாணம். 4456

சாவகச்சேரி புகையிரத நிலையத்துக்கு அருகாமையில் 1½ பரப்பு வெறுங்காணி விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளும் விலாசம் 146/4, சிறி. இராமநாதன் ரோட், கொட்டாஞ்சேனை, கொழும்பு—13. 4420

## தேவை

குறுகியகாலத்தில் மாபெரும் வளர்ச்சியடைந்து புத்தம்புது எழுத்துக்களுடன், 5 மணி நேரத்தில் அச்சு வேலைகள் செய்து கொடுக்கும் விபுலானந்த அச்சகத்தில் தயாராகும் விபுலானந்த நாள் கலண்டர்களுக்கு ஓடர்கள் தேவை. 4448

பனைப்பகுதியில், நல்ல பயன் தரும் தென்னந்தோட்டம் 25 முதல் 50 ஏக்கருக்குள் தேவை. யோசெப், 13, புகையிரத நிலையம் முன்பாக) கோவில் வீதி, யாழ்ப்பாணம். போன்: 7580. 4454

யாழ்ப்பாணத்தில் பிரபல வர்த்தக நிறுவனமொன்றிற்கு ஐந்து வருடத்திற்கு மேல் வியாபார அனுபவமுள்ள விற்பனையாளர் Salesman] உடனடியாகத் தேவை. கல்விப் பொதுத் தராதரப் (சாதாரணம்) பரீட்சையில் சித்தி பெற்றவராயும், ஆங்கில அறிவு உடையவராயும், நல்ல எழுத்து எழுதக்கூடியவராயும் நாற்பது வயதுக்குக் குறைந்தவராயும், நம்பிக்கைக்குரியவராயும் இருத்தல் வேண்டும். எதிர்பார்க்கும் சம்பளத்துடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல 4465 ஈழநாடு மே/பா, யாழ்ப்பாணம். 4465

## WANTED

Working couple both Government servants want annex/room around/between Stanley (Canagaratnam) Maha vidyalayam and Jaffna courts. Advt. No: 4466, c/o Eelanadu, Jaffna. 4466

## தவறிவிட்டது

5-9-82 [ஞாயிறு] யாழ்ப்பாணம் - பண்டத்தரிப்பு (789) பஸ்ஸில், ஒரு என்வலப்புடன் காணி, சம்பந்தமான தஸ்தாவேஜுகள் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் தயவுசெய்து கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். என். எம். சுல்தான் முகைதீன் ஹாஜியார் அன்சன் 123 கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம். 4457

## சேவை

நாட்பட்ட தலையிடி, தலைச்சுத்து, பிடரிவலி, கிறுதி, மயக்கம், வாய்ப்புண், தொண்டைப்புண், காதில் சீழ்வடிதல், காது கேள்மை குன்றல், கண் பார்வை குன்றல், நெஞ்சை இறுக்கும் வலி, இருமல் சளி தொய்வு, மூச்சுவிட முடியாமை, கை, கால்களில் பிடிப்பு, நாரிப்பிடிப்பு வாதம், வயிற்றுவலி, வயிற்றுப் போக்கு, தேகம் மெலிதல், தேகம் எரிதல், தேகபெலயீனம், சாப்பாட்டுக்கு மனமின்மை, மூலத்தில் கட்டிகள், மூலத்தால் இரத்தம் போதல், மூலக்கடுப்பு, மனப்பயம் மன உறுதி இன்மை, நித்திரைக் குறைவு, இரத்தச் சோகை, மஞ்சட் காமாலை, வீரியக் குறைவு, தும்மல், பீனிசம், முதலிய வியாதிகட்கு, உத்தர வாதத்துடன் சிகிச்சை அளிக்கப்படும். தொடர்பு கொள்ளும் விலாசம்: Dr. A.S Rajah வளர்மதி வைத்திய நிலையம், குளப்பிட்டி அண்மை, ஆனைக் கோட்டை வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். 4458

## யாழ்ப்பாண அக்கடமி

### க. பொ. த. உயர்தர பரீட்சை ஆகஸ்ட் 1983

## மீட்டல் வகுப்புகள்

க. பொ. த. உயர்தர பரீட்சைக்கு ஒருமுறையாவது தோற்றிய எவரும் இந்த மீட்டல் வகுப்புகளில் சேரலாம்.

சேர விரும்புவார் அக்கடமி காரியாலயத்தில் உள்ள விண்ணப்பப்படிவங்களில் விண்ணப்பிக்கவும்.

வகுப்புகள் 13-9-82ல் ஆரம்பமாகின்றன.

அதிபர்,
தொலைபேசி எண்: 617
376, பிரதான வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். 4426

## முதிரைப் பலகை கடத்தல்:

### இருவருக்கு அபராதம்

(சாவகச்சேரி)

55 முதிரைப் பலகைகளைச் சட்டவிரோதமாகக் கடத்திய நபருக்கு 750 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. அபராதத்தைச் செலுத்தத் தவறின் 6 மாதச் சிறைத்தண்டனை அனுபவிக்க நேரிடும் என நீதிபதி தெரிவித்தார்.

(7-ம் பக்கம் பார்க்க)

## கிராமோதயசபை நடவடிக்கை

(மன்னார்)

பேசாலை கிராமோதய சபைக்கு நிதி சேகரிக்கும் நடவடிக்கைகள் கிராமோதயசபைத் தலைவர் திரு. அல்பிறட் குலாஸ் தலைமையில் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

விடுமுறை தினங்களில் வீடியோ படக்காட்சிகள் காண்பிக்கப்பட்டு பேசாலை கிராமோதய சபைக்கு நிதிசேகரிக்கப்பட்டு வருகிறது. பேசாலை கிராமோதய சபையின் நிதிப் பொறுப்பாளர்களாக திரு. என். எஸ். குரூஸ், திரு. மரியசூசை ஸ்ரனிஸ்லாஸ் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

## இன்றைய பலன்

ஆவணி மாதம் 23-ம் திகதி
புதன்கிழமை
(8—9—82)

மேடம்: குடும்பத்தில் சுகக் குறைவு தென்படலாம். அதிக அலைச்சலின் மூலம் கவலைகள் உருவாகும். அவசர போக்கினாலும் பிறரைப் பகைத்துக் கொள்ள நேரிடும்.

இடபம்: பிரச்னைகள் பல இன்று நல்ல முடிவைத்தரும். குடும்பத்தில் மகிழ்ச்சிநிலவும். பேச்சின் நிதானம் உங்களுக்குப் பெருமையைத் தேடித் தரும்.

மிதுனம்: சகோதர வழியால் சஞ்சலங்கள் தோன்றக் கூடும். உள் வீட்டிலேயே பூசல்கள் தலைதூக்கும் அருமையான சந்தர்ப்பத்தை இழக்க நேரிடும். அயலவரும் அன்பு

கடகம்: எல்லாத் துறைகளிலும் அபிவிருத்தி காணப்படும். மாணவர்களாயின் முன்னேற வாய்ப்புக்களும் இடமுண்டு. நண்பர்களின் உதவியும் அவசியம் உண்டு.

சிங்கம்: கொள்கையில் அதிக பற்றுதல் ஏற்படும். இலட்சிய நோக்குடன் காரியமாற்றுவீர்கள். இனசன கொண்டாட்டங்களுக்கு இடமுண்டு. பிள்ளைகளின் செல்வாக்கு வளரும்.

கன்னி: பணம் பலவழிகளிலும் செலவாகும். அன்னியரொருவரால் ஏமாற்றம் அடையக்கூடும். உமது நடவடிக்கைகளை எதிரிகள் வேவு பார்ப்பர். பிரயாணத்தில் பொருள் நழுவக்கூடும்.

துலாம்: குடும்பத்தில்மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம் பெறும். பெரியவர்களின் உதவி தாராளமாகக் கிடைக்கும். பொருள் வரவில் புதிய திருப்பங்கள ஏற்படும். பொன்னான தினம்.

விருச்சிகம்: எதிர்பார்த்த தினங்களின் தடைகள் ஏற்படும். தொழில்துறையில் அவ்வளவு திருப்தி அளிக்கக்கூடியதாக இல்லை. வாழ்க்கை ஒரு சுமையாகத் தோன்றக்கூடும்.

தனு: அன்புக்கரங்கள் அணைக்கும். தெய்வநம்பிக்கை மேலிடும். இன்று சுவைதரும் நிகழ்ச்சிகள் இடம் பெறும். ஆதரவும் தாராளமாகக் கிடைக்கும்.

மகரம்: தொழில் துறையில் நல்ல வருமானம் கிடைக்கும். வணிகர்களுக்கு ஆதாயம் உண்டு புதிய உடன்படிக்கையின் மூலம் நல்ல திருப்பம் ஏற்படும் மகிழ்ச்சிகரமான பிரயாணம் கிடைக்கலாம்.

கும்பம்: சந்தர்ப்பத்துக்கு ஏற்றவண்ணம் பொருள் தாராளமாகக் கிடைக்கும். சிலர் வாழ்க்கையில் அதிர்ஷ்டலாபங்களுக்கும் இடமுண்டு. மேலிடத்து வாழ்த்துக் கிடைக்கக் கூடும.

மீனம்: வாழ்க்கையில் புதிரானநிலை தென்படும். எதிலும் தாக்க மனப்பான்மை உருவாகும். சிநேகித வழியால் கவலை தோன்றக்கூடும். மனத்திடம் வேண்டும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## அந்தியேட்டி அழைப்பு

அன்புடையீர்!

9-9-82 வியாழக்கிழமை காலை நடக்கவிருக்கும் எங்கள் அன்புத் தந்தை திரு. மு. சின்னையா (வேவில் சின்னையா உபாத்தியாயர்) அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகளிலும் அதைத்தொடர்ந்து நண்பகல் நடக்கவிருக்கும் வீட்டுக் கிரித்தியங்களிலும் பங்குபற்றுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

இப்படிக்கு
பிள்ளைகள்; சிவக்கொழுந்து, அன்னலட்சுமி, கதிர்காமலிங்கம், வள்ளியம்மைப்பிள்ளை, முருகுப்பிள்ளை.

4464 வேவில், வல்வெட்டித்துறை.

## தேவை

யாழ். நகரிலுள்ள புதிய இருதயநோய் சிகிச்சைப் பிரிவுக்கு பின்வரும் வெற்றிடங்கள் உண்டு.

(1) M. B. B. S. டாக்டர்கள், இருதய நோய் சிகிச்சையில் அனுபவமுள்ளோர் விரும்பப்படுவர்.
(2) R. M. P. Monitoring
(3) பூரண தராதரமுள்ள தாதிகள் — 4. [30 வயதுக்குட்பட்டோர்]
(4) மாணவ தாதிகள் — 4 [25 வயதுக்குட்பட்டோர்]
(5) அற்றெண்டன்ஸ் (Attendants) இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்
(6) சேவகர் [Peons]
(7) கூலியாட்கள் [Labourers]

20-09-1982ம் திகதிக்கு முன் எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும்.

354/7, பருத்தித்துறை வீதி,
தொலைபேசி: 8165 ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
4440

## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

### முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இல: 307/ஈடு
மார்க்கு யோசேப். இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு. — வாதி

எதிராக

தம்பு சோமாஸ்கந்தன், புதுக்குடியிருப்பு, தற்போது கடவெல ரோட், இலமடபால, துண்ணுகே, நீர்கொழும்பு, — பிரதிவாதி

மேற்குறித்த வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும், குறித்த கோட்டால் எனக்கு அனுப்பப்பட்ட கொமிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ் விபரிக்கப்படும் ஆதனம் 1982-ம் ஆண்டு ஒக்தோபர் மாதம் 27ந் திகதி [27-10-1982] புதன்கிழமை காலை 10-00 மணிதொடக்கம் குறித்த காணியில் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

(கோட்டால் அனுமதிக்கப்பட்ட தொகை ரூபா 6,000/-)

### தீர்வைத் தொகை

ரூபா 3,140/-வும், மேலும் ரூபா 2,000/-க்கு 15-9-1981 தொடக்கம் 20-3-82 வரை நூற்றுக்கு 12 வீதவட்டியும், பின் 21-3-1982 தொடக்கம் விற்பனைத் திகதிவரை 12 வீத வட்டியும், நடைபெற்ற செலவு ரூபா 500/-உம்.

### ஆதனடாப்பு

வடமாகாணம் முல்லைத்தீவுப் பெரும்பிரிவு புதுக்குடியிருப்புப் பகுதி அம்பலவன் பொக்கணை பளமாத்தளன் இறை T. P 392164-ல் காணும் இராஜப்பர் தறையில் சோளகம் விசாலம் ஏக்கர் (9) ஒன்பது றூட் (2) இரண்டு பேட்செஸ் (20) இருபது இதில் தெற்குப்பக்கமாக பிரிவிட்டரைவாசி விசாலம் ஏக்கர் (4) நாலுறூட் மூன்று பேட்செஸ்(10 பத்து. எல்லை கிழக்கு: வைரமுத்து செல்லத்துரைக்குரியவாதனம். தெற்கு; ஒழுங்கை, மேற்கு: யோசேப் மார்க்குப் பிள்ளைக்குரிய வாதனம். வடக்கு; மார்க்கு யோசேப்புக்கும் மறுபேருக்குமுரிய வாதனம். இதடங்கலும் இதைச் சேர்ந்தவைகளும்.

தி. வேலுப்பிள்ளை, J. P
"கெச்சர் வாசம்", ஏலதாரர், நீதிமன்ற விற்பனவு
வல்வெட்டித்துறை, ஆணையாளர், விலைமதிப்பாளர்.
6-9-1982 4452

## கும்பாபிஷேகம்

(கரவெட்டி

கரவெட்டி சாமியன் அரசடி ஞானவைரவர் ஆலய மகா கும்பாபிஷேகம் இம்மாதம் 13ம் திகதி நடைபெறவுள்ளது.

இக்கும்பாபிஷேக விழாவை தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும் நல்லூர் எம். பி. யுமான திரு. மு. சிவசிதம்பரம் ஆரம்பித்து வைப்பார். இதனைத் தொடர்ந்து சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, பண்டிதர் பொன் கணேசன் ஆகியோர் சமயவிரிவுரை நிகழ்த்துவார்கள்.

## உடுப்புப் பார்சல் யாருடையது?

நல்லூர் பருத்தித்துறை வீதியில் முத்திரைச்சந்திக்கு அருகில் ஒரு உடுப்பு பார்சலை அதே இடத்தைச்சேர்ந்த திரு வே. சபாரத்தினம் என்பவர் கண்டெடுத்து ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார் உரியவர் தகுந்த அந்தாட்சி காட்டி காரியாலய நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

# சுவிட்ஸர்லாந்திலுள்ள போலந்து தூதரகத்தில் 9 ராஜதந்திரிகள்

# துப்பாக்கி முனையில் பணயம்

## காவலிலுள்ள தொழிற்சங்கவாதிகளை விடுதலைசெய்யக் கோரிக்கை

லண்டன், செப். 7

போலந்து சொலிடாறிட்டி தொழிற்சங்கவாதிகளின் ஆதரவாளர்கள் என்று தம்மை அறிமுகப்படுத்தியுள்ள துப்பாக்கி ஏந்திய சில நபர்கள் சுவிட்சர்லாந்தின் பேர்ண் நகரிலுள்ள போலந்துநாட்டு தூதரகத்தில் 9 பேரைப்பணயக் கைதிகளாக வைத்துள்ளனர்.

48 மணித்தியாலங்களுக்குள் தடுப்புக்காவலில் வைத்துள்ள சகலசொலிடாறிட்டி தொழிற்சங்கவாதிகளையும் விடுதலை செய்யவேண்டுமென்று இந்த துப்பாக்கி நபர்கள் போலந்து இராணுவ ஆட்சியாளரைப் பணித்துள்ளனர்.

பேர்ண் நகர போலந்து தூதரகத்தில் துப்பாக்கிநபர்களால் பணயக்கைதிகளாக வைக்கப்பட்டுள்ள ஒன்பது போலந்து ராஜதந்திரிகளில் கர்ப்பிணிப் பெண்ணொருவர் நீண்ட நேரத்துக்குப் பின்னர் விடுதலை செய்யப்பட்டார்.

சுவிட்சலாந்து அரசாங்கம் விடரீதங்கள் எதுவும் இடம் பெறாத வகையில் துப்பாக்கி நபர்களுடன் சமரசப்பேச்சு வார்த்தைகளை நடத்திவருகின்றது. இதேவேளை போலந்து அரசாங்கம் பணயக்கைதிகளாகியுள்ள தனது ராஜதந்திரிகளின் பாதுகாப்புக்கு உத்தரவாதமளிக்கும்படியும் சுவிட்சர்லாந்து அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

போலந்திலுள்ள சொலிடாறிட்றி தொழிற்சங்க இயக்கத்தவர் இப்பணய நாடகம் குறித்து தமக்கு எதுவும் தெரியாதெனக் கூறியுள்ளனர். (கி–வெ)

## டிராக்டர் விபத்து: ரூ. 12,750 நஷ்டஈடு

சாவகச்சேரி)

உழவு இயந்திரத்தால் மோதிய நபருக்கு 12,750 ரூபா நஷ்டஈடாக வழங்குமாறு சாவகச்சேரி நீதிபதி சாரதிக்கு உத்தரவிட்டார்.

மீசாலையைச் சேர்ந்த பொ. சி. கந்தையா என்பவருக்கு மேற்படி நஷ்டஈட்டைக் கொடுக்கும்படி அவ்வூரைச் சேர்ந்த ஆ. கிருஷ்ணபிள்ளை என்பவருக்கு உத்தரவிடப்பட்டது.

இவ்வழக்கு சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி எம். எச். காரியப்பர் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது.

1977ம் ஆண்டு டிசம்பர் 18ல் முறைப்பாட்டுக்காரரான கந்தையா முரசுமோட்டை 2ம் கட்டையடியில் சைக்கிளில் வந்து கொண்டிருக்கும் போது உழவு இயந்திரத்தால் மோதிப் படுகாயமுண்டாக்கியதற்காக 20,000 ரூபா நஷ்டஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

விபத்தில் சிக்கியவரான கந்தையாவின் மண்டை, விலா எலும்பு, தோள்மூட்டு ஆகியவற்றில் காயமேற்பட்டிருந்தது 9 பிள்ளைகளின் தந்தையான இவர் யாழ். வைத்தியசாலையிலும் கொழும்பிலும் சிகிச்சை பெற்றிருந்தார்.

## இந்தியா-ஜெர்மன் ஒத்துழைப்பு உடன்படிக்கை

புதுடில்லி, செப். 7

இந்தியாவும் ஜெர்மன் சமஷ்டிக் குடியரசும் பொருளாதாரம், வர்த்தகம், தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் பரஸ்பரம் ஒத்துழைப்பதற்கான உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டுள்ளன. (வெ)

## உத்தர பிரதேசத்தில் வெள்ளநிலை மோசம் இராணுவம் அழைப்பு 275 பேர் பலி

புதுடில்லி, செப். 7

உத்தரபிரதேசத்தில்வெள்ள நிலைமை மோசமடைந்துள்ளதையடுத்து, நிவாரணப்பணிகளை மேற்கொள்வதற்காக இராணுவம் சேவைக்குஅழைக்கப்பட்டுள்ளது.

இப்பிரதேசத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விமானப்படையின் இரு ஹெலிகாப்டர்கள் உணவுப் பார்சல்களை வழங்கி வருகின்றன.

இங்குள்ள பெரும்பாலான வீதிகள் நீருக்கடியில் மூழ்கியுள்ளன. இதனால் போக்குவரத்துகள் ஸ்தம்பிதநிலையை அடைந்துள்ளதுடன், ரயில் சேவைகளும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன

வெள்ளமீட்புப் பணிகளை மேற்கொள்வதற்காக உத்தர பிரதேசத்தின் பாலியாமாவட்டத்திற்கு இராணுவஇழுவைப் படகுகளும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இப் பகுதியிலுள்ள மக்களுக்கு வழங்குவதற்கென 500 தொன் அரிசியை மத்தியஅரசு அனுப்பிவைத்துள்ளது.

உத்தர பிரதேசத்தில் வெள்ளப் பெருக்கினால் இதுவரை 275 பேர் பலியானதாகவும், ஆயிரக்கணக்கானோர் வீடுகளை இழந்துள்ளதாகவும், ஆயிரத்திற்கு மதிகமான கிராமங்கள் நீருள் மூழ்கியுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது. (வெ)

## ஆந்திரா சபாநாயகராக ரெட்டி தெரிவு

புதுடில்லி. செப்–7

ஆந்திரா பிரதேச சட்டசபை சபாநாயகராக திரு. ரெட்டி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். [வெ]

## கோஷ்டி மோதல் ஒருவர் பலி!

சென்னை. செப்–7

ஈரோட்டிற்கு அருகே இடம்பெற்ற கோஷ்டி மோதலின் போது ஒருவர் பலியானார். 21 பேர் காயமடைந்தனர்..

இது தொடர்பாக 40 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். [வெ]

## "கிராமங்கள் தோறும் நூல்நிலையங்கள் அவசியம்"

[கரவெட்டி]

'இன்றைய இளைஞர்களுக்கு வாழ்வு கொடுக்கக்கூடியது அறிவு ஒன்றே அந்த அறிவை வளர்க்கக்கூடியது நூல்நிலையங்கள். எனவே கிராமங்கள் தோறும் நூல் நிலையங்கள் ஆரம்பிக்கப்படவேண்டியது அவசியமானது.'

இவ்வாறு வேலணை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. பொன். கணேஷன் கரவை இளைஞர் ஒன்றியத்தின் நூலகத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்

நிலையத் தலைவர் திரு. வீ. லீலாரட்ணம் தலைமையில் நடைபெற்ற இத்திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட திரு. பொன். கணேசன் மேலும் பேசுகையில் கூறியதாவது:–

'கரவெட்டி மத்தி கிராமத்தின் நெடுநாள் தேவையாக இருந்த இந்த நூல் நிலையத்தை இளைஞர்களே முன்வந்து நிறுவியது பாராட்டுக்குரியது.

நூல்நிலையத்தோடு மட்டும் நிற்காமல் கிராம வளர்ச்சிக்காக சிரமதான வேலைகளை இளைஞர்கள் மேற்கொள்ள வேண்டும். சிறுகைத்தொழில்களை ஆரம்பித்து வேலைவாய்ப்புக்களைக் கொடுக்கவேண்டும். அது இளைஞர்களால்தான் முடியும்.

இந்த நூல் நிலையத்திற்குரிய நூல்கள், சஞ்சிகைகள் ஆகியவற்றைப் பாடசாலை ஆசிரியர்களிடமிருந்து அன்பளிப்பாகப் பெற்றுத்தர முயற்சிசெய்வேன். பாராளுமன்ற உறுப்பினரோடு தொடர்புகொண்டு இந்நூல் நிலையத்துக்குரிய நிரந்தர கட்டிடம் ஒன்றினை நிறுவுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளும் எடுக்கப்படும்'

கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ஆ. வ. தங்கராசா சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். (இ)

## தகவல் நிலையம்

சென்னை. செப்–7

திருச்சிராப்பள்ளி விமான நிலையத்தில் தகவல் நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

சென்னை விமான நிலையத்திற்கு அடுத்த படியாக திருச்சிராப்பள்ளி விமான நிலையத்திலேயே தகவல் நிலையம் அமைக்கப்பட்டது.

மதுரையிலும் இத்தகைய தகவல் நிலையமொன்று விரைவில் அமைக்கப்படவுள்ளது. [வெ]

## ஈரான்-ஈராக் யுத்தம் 5 ஈரானியர் பலி!

பாக்தாத், செப். 7

ஈரானிற்கும் ஈராக்கிற்குமிடையே நடைபெற்றுவரும் யுத்தத்தில் ஐந்து ஈரானியர்கள் கொல்லப்பட்டதாக ஈராக் அறிவித்துள்ளது.

இவ்யுத்தத்தின்போது ஈரானின் இரண்டு கவசவாகனங்களும் சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. வெ)

## செயற்கைக் கோள் செயலிழந்தது

புதுடில்லி. செப். 7

முதலாவது தேசிய செயற்கைக் கோளான இன்சாட் ஒன்று ஏ செயலிலந்து விட்டதாக அறிவிக்கப்பட்டது.

எரிபொருள் தீர்ந்தமையாலேயே இக் கோள் செயலிழந்ததாகத் தெரிவிக்கப் பட்டது. (வெ]

## ரூ. 1, 1/2 லட்சம் கடத்தல் பொருட்கள்

சென்னை. செப்– 7

கடத்திச் செல்லப்பட்ட 1½ லட்சம் ரூபா பெறுமதியான பொருட்களை மதுரைக் கருகே வைத்து சுங்க அதிகாரிகள் கைப்பற்றினர். (வெ)

## சர்வதேச நிதிநிறுவனத்திற்கு கூடுதலான நிதிஉதவி தேவை

வாஷிங்டன், செப். 7

''வளர்ச்சிப் பணிகளுக்குக் கூடுதலான நிதி உதவி சர்வதேச நிதி நிறுவனத்திற்குத் தேவைப்படுகிறது. ஏழை நாடுகளுக்கு உதவுவதற்கே இந்நிதி உதவி தேவைப்படுகிறது''.

இவ்வாறு உலகவங்கித் தலைவர் உலகநாடுகளின் நிதியமைச்சர்கள் மகாநாட்டில் உரையாற்றுகையில் கூறினர்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;

''செல்வந்த நாடுகள் சர்வதேச நிதி நிறுவனத்திற்கு வழங்கிவந்த நிதி உதவியைக் குறைத்துள்ளன. இதனால் சர்வதேச நிதி நிறுவனம வளரும் நாடுகளுக்கு உதவமுடியாதுள்ளது.

''செல்வந்த நாடுகள் வறிய நாடுகளுக்கு உதவ முன்வர வேண்டும். இதன் மூலமே வளரும் நாடுகள் வளர்ச்சிப் பணிகளைத் தொடர்ந்தும் மேற்கொள்ளமுடியும். சர்வதேச நிதிநிறுவனம் 200 கோடி மக்களுக்கு உதவியளிக்க வேண்டியுள்ளது'' என்றார். (வெ)

## வளரும் நாடுகளுக்கு நவீன தகவல் நிலையம் தேவை

ஜெகர்த்தா செப்– 7

''வளரும் நாடுகள் நவீன தகவல் நிலையமொன்றை அமைக்கவேண்டும். இத்தகைய நிலையம் வளரும் நாடுகள் தமக்கிடையே செய்திகளைப் பரிமாறிக் கொள்ள உதவும்''.

இவ்வாறு இந்தோனேஷியாவின் தகவல், செய்தித்துறை அமைச்சர் செய்தித் தொடர்பு சம்பந்தமான மகா நாடொன்றில் உரையாற்றுகையில் கூறினார். [வெ

## பனம் விதைக்குப் பந்து

2000 பனம் விதைகளைச் சேகரித்துக் கொடுப்பவர்களுக்கு யாழ். மில்க்வைற் ஸ்தாபனம் ஒரு பெரிய பந்தை வழங்குகிறது. இது விளையாட்டுக் கழகங்களுக்கும், பாடசாலைகளுக்கும் பயன் படும்.

### மணிவாக்கு

அறிவின் முதிர்ச்சி கண்களிலே விளங்கும். அன்பின் முதிர்ச்சி முகத்திலே கண்டுவிடலாம்; ஆனல் மனதிலே எழும் சிறுஒலியிலேதான் ஆன்மா விளங்குகிறது. —லாங்பெலோ

## நமது நோக்கு

### மீன்பிடியா அல்லது 'வால்' பிடியா?

மீன்பிடி அபிவிருத்திக்கு எவராலும் புரிய முடியாத சாதனைகளை— மீன்பிடி அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா அவர்களும், அவருடைய அமைச்சின் செயலாளர் அனுரா வீரரத்னவும் இயற்றிவருகின்றனரென்று பத்திரிகைகளும் வானொலியும் முழங்குகின்றன.

பாவனையாளர்களின் மீன் தட்டுப்பாடு இருந்தபடியே இருக்கின்றது. விலையின் வீறான ஏற்றத்தால் கிடைக்கும் மீன்கள் செல்வரின் வயிற்றறையே உறைவிடமாகக் கொள்கின்றன.

கருவாடு தின்றூர் கைலாயம்போவார்? என்றகேள்வியின் சிலேடை புரியாதவர் தாமும் கருவாட்டைக் கண்ணுல் காண முடிகின்றதா? மீன்தட்டுப்பாடு தொடரும்போது கருவாடு உற்பத்தி எவ்வாறு நடக்கும்; உணவுத் தட்டுப்பாடு இருக்கும் வரைக்கும்,ஜனத்தொகைப் பெருக்கம், மனித கருவாட்டைத் தயார்செய்வது கண்கூடு.

இந்தப் பின்னணியில் பருத்தித்துறையில் சிறுமீன் பிடியாளரின் பிரச்னைதீர்ந்தபாடில்லையெனத்தோன்றுகிறது.

சிறு மீன் பிடியாளர்கள் மட்டுமல்ல, பெருந் 'தவக்கைகளை'த் தவிர சிறுமனிதரின் பெருங்குறைகள் இந்த ஆட்சியில் தீர்த்துவைக்கப்படும் சாத்தியம் இதுகாறும் இருக்கவில்லை.

சிறுகடை, சிறுதோட்டம் சிறு கைத்தொழில், சிறு விவசாயம், சிறு பாடசாலை, சிறு மருத்துவசாலை சிறு மீன்பிடி— இவையெல்லாம், மாட்டுவண்டி 'சுவர்க்க' சிங்கப்பூர் நகரத்தில் மறைந்ததுபோல், மாண்டு மடியும் நிலையில் இருப்பதுவியப்டல்ல.

பெருந்தொழிலாளர், அதிகாரமுடையவர், செல்வம் செல்வாக்கு, அமைச்சின் ஆதரவு, ஆளுங்கட்சி எம். பி. இவர்களின் ஆசீர்வாதம், உதவி ஒத்தாசை இன்றி ஒரு சிறு 'பின்' போன்ற பொருளையும்பெற்றுக் கொள்ளமுடியாது.

அபிவிருத்தியென்ருல் அது பரந்த பெரியதோற்றமளிக்கும் செயல்; பத்திரிகைக்கும் வானொலிக்கும் தொலைக்காட்சிக்கும் உரிய பிரமாண்டமான திட்டங்கள்.

பருத்தித்துறை சிறு மீன்பிடியாளர்கள் தங்கள் பல் ஆயிரம் வலைகளைக்கொண்டு எத்தனை வாக்குச்சீட்டுகளைப் பிடிப்பார்கள்? அது ஒரு முக்கிய கேள்வி. அதுவும் கடந்தகாலத்தில்நடைபெற்றதேர்தல்களில் அக்கம் பெற்றகேள்வி, இன்று நிலைமை மாறுகின்றது விகிதாசாரமும் கட்சி ஆதிக்கமும்!

இன்று இழுவைப் படகுகள் சிறு மீன்பிடியாளரை உய்யவிடுவார்களா?

இலங்கை போக்குவரத்துச்சபை நாளுக்குநாள் சிடையும் மாற்றத்தை டார்க்கிறேமல்லவா? ஆரம்பத்தில் 'இபோச'வின் நெருக்கடிக்கு 'மிண்டு' கொடுக்க வந்த தனியார் 'வான்கள்', ஆள் சேர்ப்பதில் என்ன பண்பும் பரிவும் காட்டின? இன்று முதுகு முறியுமளவிற்கு வானின் 'மூக்கு' முட்ட பிரயாணிகளை வைக்கல் கட்டுப்போல ஏற்றுகின்றனவல்லவா?

காலகதியில் 'இபோச' 'இபோசா' என்று மாறினல் அது அதிசயமா?

நாட்டின் சுபீட்சம், கிராம வளர்ச்சியில் காணப்படும் என்பது வெறும் வாய் வேதாந்தம். சுவர்ணபூமித் திட்டமும், தேசிய வீடமைப்புத் திட்டமும், கிராமத்தை நவீன மயமாக்கும் போக்கில் செயற்படுகின்றன. சாதாரண ஏழைத் தொழிலாளி, விவசாயி, வெளியூர் வேலையிலும், உயர் வருமானத்திலும், வியாபார (கறுப்புஉட்பட) கச்சவடத்திலும் நாட்டம் கொள்ளும் நிர்ப்பந்தம் இன்று.

எனவே பருத்தித்துறையில் இழுபறிப்படும் சிறு மீன்பிடியாளர்களுக்கு உண்மையில் உண்ணுவிரதம் இருக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. பசியால் வாடும் மீன்பிடியாளருக்கு அந்த அனுபவம் அற்ற பருத்தித்துறை எம். பி தலைமை தாங்குவது பலனளிக்குமா?

மீன்பிடிக்கு அத்தியாவசியமானவலைகளும், தொழிற்திறமையும் இருந்தும் என்ன பயன்? பருத்தித்துறை எம். பி யின் யோசனையின் படி அமைச்சின் 'வால்பிடியிலே' வெற்றி தங்கியிருக்கிறது என்ன விபரீதம்!

எனவே உண்ணுவிரதம் மீன்பிடி அமைச்சின் அலுவலகத்துக்கு முன்பாக நடக்க வேண்டியிருக்கிறது.

உண்ணுவிரதம் ஒரு பழுதடைந்த ஆயுதமாய்விட்டது. ஜனதிபதி ஜெயவர்த்தன நாட்டைப் பிரிக்க தமிழர் விடுதலைக் கூட்டணி சவால் விடுத்தால் அவர் யாழ்ப்பாண முற்ற வெளியிலே உண்ணுவிரதம் அல்லது சத்தியாக்கிரகம் செய்வாரெனச் சொன்னதாகப் படித்தோம்.

அந்த உண்ணுவிரதம் வேறு; அதற்கு எவ்வளவு பாதுகாப்பு கிடைக்கும்! ''சிங்களம் மட்டும்'' சட்டத்தை எதிர்த்து காலிமுகத்திடலில் நடத்திய உண்ணுவிரதம் நினைவில் இருக்கட்டும்!

மக்கள் பிரச்னைகளை அவர்களின் எம். பி. அவர்களுடன் கூடி அளவளாவி தீர்த்து வைப்பதே உத்தமம்; அதனை அமைச்சுக்கு எடுத்துச் சுமக்கும் வழக்கம், ஜனநாயக ஆட்சியின் பெருங்குறையையே பிரதிபலிக்கின்றது.

பதவியிலிருக்கும் போது மக்கள் தொண்டனுக அவர்களின் துயரைத் துடைப்பதே நகைச் சுவைக்கு ஒளி ஊட்டும்.

# அழியாத இலக்கியங்களை படைக்கவேண்டும்

## எழுத்தாளருக்கு அமிர் யோசனை

[யாழ்ம்பாணம்]

''குறுகிய காலப் பிரச்சனை பற்றிய இலங்கியங்களை விட, காலத்தால் அழியாத, அதே வேளை பல தடவை படிக்கத் தூண்டவைக்கும் இலக்கியங்களை எழுத்தாளர்கள் படைக்க வேண்டும். தமிழ் வாழ, மானிடம் தழைக்க, தரமான இலக்கியங்களை, இளம் தலைமுறை சுவைக்க ஆற்றுப்படுத்தவேண்டும்'' என காங்கேசன்துறைத் தொகுதி கலை இலக்கிய ஆர்வலர் ஒன்றிய ஆரம்பவிழாவைத் தொடக்கிவைத்துப் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

மேற்படி ஒன்றியத்தின் முதலாவது சந்திப்பு மகாஜனக் கல்லூரிஅதிபர் பொன். சோமசுந்தரன்தலைமையில்அநு வை. நாகராஜனின் வரவேற்புரை ஒன்றியம் பற்றிய விளக்க உரையுடன் தொடங்கியது.

''இன்றைய தமிழ் இலக்கியப்போக்கும் பரிகாரமும்'' என்ற பொருளில் கருத்துக்கள் வழங்கப்பட்டன.

காத்திரமான தமிழ் அறிவு இல்லாமல், பேனு பிடிப்பவன், மொழி ரீதியாக உருவம் கொடுக்கும் ரீதியாக இளம் சந்ததியை குழப்பியடிக்கிருன். பலமான பின்னணியில் வந்த எமது மொழியில் இக் குறைபாடு ஆரோக்கியமானதல்ல, கவிஞர்கள் இறுக்கமாக ஆழமாக படைக்காது, நீட்டி நீட்டி கற்றை கற்றையாய் பீச்சுதல் கலையின்பாற்பட்டதன்று ஒரு அரசியல் சித்தாந்தமே சரி என்று சன்னதங்கொண்டு எழுதுவதும் பயனற்றது என கவிஞர் க. சச்சிதானந்தன் பேசுகையில் கூறினர்.

### எரியும் பிரச்னைகள்

''பழமையோடு மாரடிக்காமல் எரியும் பிரச்சனைகளை

[7ம் பக்கம் பார்க்க]

# கூட்டணிபொதுச்சபைமுடிவை தமிழ் மக்கள் ஏற்கவேண்டும்

## வெளிநாடு செல்லுமுன் வி.என். கோரிக்கை

(மட்டுவில்)

''தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச்சபை இம் மாதம் வவுனியாவில் எடுக்கும் தீர்மானத்தை தமிழ் மக்கள் அனைவரும் ஏற்று அதை அமுல் செய்வதற்கு ஒத்துழைப்புக் கொடுக்கவேண்டும். குறிப்பாக சாவகச்சேரி தொகுதி மக்கள், பொதுச்சபையின் தீர்மானத்தை அமுல் செய்ய பூரண ஒத்துழைப்பைக் கொடுக்கவேண்டும்.''

இவ்வாறு சர்வதேச பாராளுமன்ற ஒன்றிய செயற்குழு உறுப்பினரும், சாவகச்சேரி பாராளுமன்ற உறுப்பினருமான திரு வி. என். நவரத்தினம் சர்வதேச பாராளுமன்ற ஒன்றிய மகாநாட்டிற்காக ரோம் நகருக்குப் புறப்பட்டுச் செல்லும்போது சாவகச்சேரித் தொகுதி மக்களுக்கு விடுத்த தனது செய்தியில் குறிப்பிட்டார்.

திரு. வி. என். நவரத்தினமும் இரகுபதி நவரத்தினமும் இங்கிருந்து சென்று அங்கு இரண்டு தினங்களும் புதுடில்லியில் இரண்டு தினங்களும் தங்கிச் செல்வார்கள். திரு. நவரத்தினம் இந்தியாவின் முக்கிய அரசியல் தலைவர்களையும் சந்தித்து உரையாடுவார்.

ரோம் செல்லும் வழியில் மேற்கு ஜெர்மனியில் மூன்று தினங்கள் தங்கியிருக்கும் திரு நவரத்தினம் அங்கு இருக்கும் இலங்கையர்களைச் சந்திப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

ரோம் நகரில் சர்வதேச பாராளுமன்ற ஒன்றிய செயற்குழு கூட்டத்திலும், மகாநாட்டிலும் கலந்து கொண்ட பின் திரு. நவரத்தினம் அங்கிருந்து இங்கிலாந்திற்கும் பின் அமெரிக்காவுக்கும் செல்வார்

அமெரிக்காவில் நிதி உதவி ஸ்தாபன மேல்மட்ட அதிகாரிகளைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்து பொழுது யாழ். மாவட்டத்தில் குடிதண்ணீர் விநியோகத்திட்டத்தை மேலும் பல இடங்களுக்கு விரிவுபடுத்துவதற்கும் கேரதீவு சங்குப்பிட்டி மகாதேவா பாலத்திற்கும். நிதி உதவி கோருவார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## பாவனைக்குதவாத உப்பு 50 மூடைகள் அழிப்பு

(மன்னர்)

மன்னர் பகுதியில் சில இடங்களில் விளைந்துள்ள உப்பில் நச்சுத்தன்மை காணப்படுகின்றது. இதனுல் இப்பகுதிகளில் விளையும் உப்பை உணவிற்குப் பயன்படுத்த வேண்டாமெனப் பொதுமக்கள் கேட்கப்பட்டிருக்கின்றனர். ஆயினும் சிலர் நச்சுத் தன்மையுள்ள இவ்வுப்பைச் சேகரித்து விற்பனைசெய்கின்றனராம்.

இவ்வாறு சேகரித்து விற்பனைக்காக லொறியொன்றில் 50 மூடைகள் நச்சு உப்பு கொண்டுசெல்லப்பட்டபோது மன்னர் உதவி அரசாங்க அதிபர் அவற்றைக் கைப்பற்றினர். பின்னர் அவை உப்பள பொறுப்பதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டு அழிக்கப்பட்டனவென்று தெரிவிக்கப்பட்டது. [கி]

## ''பிரான்ஸில் மக்கள் ஆட்சி ஏற்பட நாடகங்களே காரணமாகும்''

(மட்டுவில்)

'பிரான்ஸ் நாட்டில் தலைதூக்கியிருந்த பிரபுக்கள் ஆட்சிக்கு முற்றுப்புள்ளிவைத்த மக்கள் மக்கள் ஆட்சியை ஏற்படுத்த முக்சியகாரணமாக அமைந்திருந்தவை ஜீன்கப் என்பவன்ன் புரட்சிக் கருத்துக்களை உள்ளடக்கிய நகைச்சுவை நாடகங்களே''

இவ்வாறு சாவகச்சேரி எம். பி. திரு வி. என். நவரத்தினம் வளர்மதி சனசமூக நிலையத்தின் பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டு கூறினர்.

தென் மட்டுவில் வளர்மதி சனசமூக நிலைய ஆண்டுவிழாவின்இறுதிநாள் விழாவாக இப் பரிசளிப்பு வைவபம் நடைபெற்றது இதில் நாடக,நாட்டிய, பேச்சு, பாட்டுப்போட்டிகளில் வெற்றிபெற்ற கலைஞர்களுட்பட விளையாட்டு வீரர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன.

திரு. நவரத்தினம் எம். பி. தொடர்ந்து அங்கு உரையாற்றுகையில்;- ,'பகுத்தறிவுள்ளவர்களின் முயற்சிகள், நாடு, சமுதாயம் போன்றவற்றினை சீர்திருத்துவதாகவே இருக்கும் அவர்களிற் சிலர் தமது சீரிய கருத்துக்களை நாடகங்கள்மூலம் மக்கள்மத்தியில் பரப்பி அவர்கள் மத்தியில் அறிவு,சிந்தனை திறமை, உணர்ச்சி ஆகியனவற்றை ஏற்படுத்தி நாட்டிற்கும் சமுதாயத்திற்கும் தொண்டு செய்கிருர்கள்.

பிரான்ஸ் நாட்டில் நிலவிய பிரபுக்களின்ஆட்சிக்கெதிரான புரட்சியை ஏற்படுத்தி மக்கள் ஆட்சியை மலரச்செய்ய மூலகாரணமாக இருந்ததும் நாடகம் என்ருர்.

### பிலிப்பைன்ஸ் ஜனதிபதி

## மார்க்கோஸ் இறந்தால் ஆட்சிப்பொறுப்பு குழுவிடம்

மணிலா, செப். 7

பிலிப்பைன்ஸ் ஜனதிபதி பேர்டினன்ட் மார்க்கோஸ் திடீரென இறந்தால் அல்லது சுகவீனமுற்ருல் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைப்பதற்காக நிறைவேற்றுக் குழுவை நிறுவும் சட்டமூலத்தை அந்நாட்டின் தேசியப்பேரவை அங்கீகரித்துள்ளது.

இந்நிறைவேற்றுக் குழுவில் ஜனதிபதியின் மனைவி,அமைச்சர்கள் ஆகியோர் இடம்பெறுகின்றனர்.

இக்குழுவிற்குப் பிரதம மந்திரி தலைமைவகிப்பார்.

அதேவேளை பிலிப்பைன்ஸ் ஜனதிபதிதிரு. பேர்டினன்ட்டி மாக்கோஸ் அடுத்த வாரம் அமெரிக்காவுக்கு விஜயம் செய்யவுள்ளார். (வெ

## ★ ஜனதிபதி தேர்தல்

# சட்டம் இடம்கொடுத்தால் குட்டிமணியை நியமிக்கலாம்

நடைபெறவிருக்கும் ஜனதிபதி தேர்தலில் குட்டிமணியையும் ஒரு வேட்பாளராக நிறுத்தமுடியுமா? என்பது பற்றி எமது சட்டவல்லுனர் ஒருமுறை சிந்திக்க வேண்டும். தற்போது அரசினல் ஆக்கப்பட்ட பயங்கரவாதச் சட்டத்தின்கீழ் குட்டிமணிக்கும், ஜெகனுக்கும் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இதே சட்டத்தின்கீழ் வருங்காலத்தில் பல குணவர்த்தனக்களும் ஜெயவர்த்சனக்களும் பாதிக்கப்படலாமென்பதை மக்களின் வாக்குப் பலத்தின் மூலம் உலகளாவிய முறையில் தெரியப்படுத்துவதற்கு இத் தேர்தல் ஓர் அரிய பெரிய சந்தர்ப்பமாகும்.

## மக்கள் கருத்து

தற்போது எமது பாராளுமன்ற உறுப்பினர் எப்படி எமது வாக்குப் பலத்தைப் பெற்று பாராளுமன்றத்தை ஒரு பிரச்சாரப் பீடமாகப் பாவிக்கிருர்களோ அதே போன்று மக்கள் இச்சட்டத்தை நேரடியாக தமது வாக்குப்பலத்தின் மூலம் எதிர்க்கலாம். காலத்துக்குக் காலம்பெரும்பான்மையினரின் அரசுகளும் எதிர்க்கட்சிகளும் எமக்குக் கேட்டதெல்லாம் கொடுக்சப்படும் என்று வாக்குறுதியளித்து அரசில் ஏறியதும் ஏற்றிய ஏணியைக் கண்டும்காணுததுபோல எட்டி உதைவது நாம் கண்ட கடந்த காலவரலாறு நாம நமது உரிமையையும் தமைமையையும் கேட்டு போர்க்கொடிஎழுப்பும் காலங்களில் எம்மைமண்டியிடும் வகையில் சில சட்டங்களையும் திட்டங்களையும் கொண்டு வரப்போவதாக பூச்சாண்டி காட்டிபேச்சுவார்த்தைகளுக்கு அழைத்து பல உறுதிமொழிகளும் ஏன் சட்டங்களையும் திட்டங்களையும் தீட்டி அவை ஏட்டுச் சுரைக்காயாக செயற்படுத்தப்படாது ஏமாற்றப்படுவதும் நாம் நித்தமும் கண்டவைகளாகும்.

இப்படியெல்லாம் காலத்துக்கு காலம் எம்மை ஏய்துப் பிழைக்கும் இவர்களின் கண்களை திறக்க வைக்கும் வகையில் எமது வெற்றிவாக்குப் பலத்தை நாடளாவிய ஜனதிபதி தேர்தலையும் உலகமறியும் வகையில் பிரச்சார வாக்கெடுப்பாக ஆக்கவேண்டும். அல்லாது இராமன் ஆண்டாலென்ன இராவணன் ஆண்டாலென்ன என்றவகையில் எமது பொன்ஞன வாக்குகளை மீண்டும் எம்மை அடிமைத்தனத்துக்குள் ளாக்கும் ஆள்பவர்களுக்கோ, எதிர்க்கட்சிகளுக்கோ அல்லது தேர்தல் காலங்களில் வந்து பிரச்சாரம் செய்பவர்களுக்கோ ஆதரவு நல்கும் வகையில் மண்ணுக்காலாகாது சாணக்கியம் மிக்கநாம் தலைவர்கள் எமது வாக்குப்பலத்தின் மூலம் எப்படி எமது பாராளுமன்றத்தை ஒரு பிரச்சார மேடையாகத் தற்போது பாவிக்கிருர்களோ அதே போன்று நம் சகல மக்களும் ஜனதிபதி தேர்தலை உலமறியும வகையில் நம் விடிவு நோக்கி ஒரு பிரச்சார மேடையாக பாவிக்க வழிசெய்ய வேண்டும். இதற்கு தற்போது சட்டத்தால் பாதிக்சப்பட்டுள்ள குட்டிமணி, ஜெகன் போன்ருேரை சட்டம் இடம் கொடுக்கின் நியமிப்பதுநன்று.

க. சி. இராஜேஸ்வரன்
ஆடியபாத வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

## மன்னுர் மாவட்டத்தில்

# 31 வீதமானேருக்கு போஷாக்குஇல்லை

## மா. அபி. ச. தலைவர் கவலை

[மன்னுர்]

மன்னுர் மாவட்டத்தில் 31 வீதமான மக்கள் போஷாக்குக் குறைந்தவர்சளாகவே காணப்படுகின்றனர். போஷாக்கிலேயே ஒரு நாட்டின் வளர்ச்சி தங்கியுள்ளது. மனிதனின் அறிவும், உடல்பலமும் வளர போஷாக்கு மிகவும் அவசியமாகும்.

இவ்வாறு கடந்த வெள்ளிக்கிழமை எருகலம்பிட்டி மகளிர் மகாவித்தியாலயத்தில் வளர்ந்தோர்கான சத்துணவுக் கல்வித்திட்டத்தை குத்து விளக்கேற்றி ஆரம்பித்து வைத்து உரையாற்றிய மன்ஞர் மாவட்ட அபிவிருத்தி சபை தலைவர் திரு. பி. எம். செபமாலை தெரிவித்தார்.

இச்சத்துணவுக் கல்வித் திட்டத்தை மன்ஞர் மாவட்ட திட்டமிடல் திணைக்களம், மன்ஞர் மாவட்ட கல்வித்திணைக்களம், மன்ஞர் மாவட்ட சுகாதாரத் திணைக்களம் என்பன ஒன்றிணைந்து நடத்தின.

இவ்வாரம்ப வைபவத்தில் மன்ஞர் மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஏ. ஜெ. செந்தில்நாதன் மன்ஞர் திட்டமிடல் அதிகாரி திரு. இராசநாயகம், மன்ஞர் வளர்ந்தோர் கல்வி அதிகாரி ஜனுப் வஸீர், கல்வி அதிகாரி ஜனுப் இசற் ஏ. றகீம், எருக்கலம்பிட்டி முஸ்லீம் மகளிர் மகாவித்தியாலய அதிபர் ஜனுபா கரீமா கபூர், ஜனுப் பி. எம். எம். சாலிகு ஆகியோர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இவ்வைபவத்தில் தொடர்ந்து உரையாற்றிய மன்ஞர் மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. பி. எம் செமாலை தமதுரையில்: மனிதனின் ஆரம்பமும், முடிவும் எல்லோருக்கும் சமமானதே. இடைக் காலத்தில் எமது வாழ்வை வளம்படுத்தவே இப் போசாக்குக் கல்வித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் அரசாங்கம் வைத்தியசாலைகள் மூலம் திரிபோஷா, உயிர்ச்சத்து மாத்திரைகள் என்பனவற்றை வழங்கிவருவதோடு சில உப அலுவலகங்கள் மூலம் பால்மாவையும் இலவசமாக வழங்கிவருகிறது.

ஒவ்வொருவரும் தமது குழந்தைகளுக்கு குறுப்பிட்ட காலத்தில் போடவேண்டிய தடுப்பூசிகளைப் போட்டுக் கொள்ளவேண்டும் என்ருர்.

## நூல் விமர்சனம்

நூல் சைவநெறித் தோத்திரத்திரட்டு

தொகுப்பாசிரியர் திரு தி. விசுவலிங்கம்

பதிப்பாசிரியர் திரு. வி. நாகலிங்கம்.

விலை: ரூபா. 25

அடங்கன் முறையாகிய தேவாரம் முழுவதையும் பாராயணம் செய்யவிரும்பிய சிவாலய முனிவருக்கு அகத்தியர் கொடுத்த தேவாரத்திரட்டுப்போல இக்காலத்தவர்கட்கு இத் தோத்திரத் திரட்டு கிடைத்திருக்கின்றது என்ருல் சாலப்பொருந்தும். பன்னிருதிரு முறைகளிலும் திருப்புகழ் வள்ளலார் அருட்பா நற்சிந்தனை முதலிய நூல்களில் இருந்தும் திரட்டப்பட்ட அரிய இனிய தோத்திரங்கள் கொண்டதாக இந் நூல் விளங்குகின்றது.

இந்நூலைத் தொகுத்த திரு. தி. விசுவலிங்கம் அவர்களின் திருமுறைப்பயிற்சியையும் எல்லோருக்கும் பயன்படத்தக்கதாகச் சில பதிகங்களில் சில பாடல்களையும் சில பதிகங்களில் முழுப்பாடல்களையும் சேர்ந்திருக்கும் பண்பும் நன்கு பாராட்டத்தக்கதாகும். தோத்திரப்பாக்களில் ஆர்வத்தைக்கொடுக்கக்கூடியதாகவும் திருமுறைகளின் பெருமையை உணரவாய்ப்பாகவும் பதிகங்களில் தெரிவு செய்யப்பட்ட பாடல்கள் விளங்குகின்றன. அகத்தியர் தேவாரங்களைத் திரட்டியதற்கு ஆதாரமாகக் கொண்டபதிகக் குறியீடுகளை அதாவது குருவருள் அஞ்செழுந்துண்மை சிவனுருவம போன்றவற்றை அப்பதிகங்களின் மேலே குறித்திருக்கின்றமை மெச்சத்தகசெயலாகும். இவ்வரியநூலை திரு. விசுவலிங்கம் அவர்கள் தமது தாயாரின் நினைவு வெளியீடாக வெளிபிட்டது மட்டுமன்றி இதன் வருவாயை ஈழத்துசிதம்பராலய திருப்பணிக்கு அர்ப்பணித்திருக்கின்ருர். நூலில் தாயாரின் படக்கிற்குபதிலாக உலக மாதாபிதாவாக ஈழத்துச் சிதம்பரத்தில் காட்சி கொடுக்கின்ற நடராசாப்பெருமானதும் சிவகாமிப்பிராட்டியினதும் படங்களை இடம் பெறச் செய்தசெயல் பொன் ஆபரணத்தில் வைரத்தைப் பதித்ததுபோன்ற செயலாக உள்ளது. மரணமானவரின் நினைவாக அந்தியேட்டி ஆண்டுத்திவசம் ஆகிய சமயங்களில் வெளியிடுகின்றமலர்கள் வெளியிடுபவருக்கு கொடுக்கும்வரைக்கும் பெற்றுக்கொள்பவர் தமது வீட்டுக்குப் புறப்படும் வரைக்குமே பேணப்படுவதாய் தேவை முடிந்தபின் யாரும் தேடாத பொருளாய் புறக்கணிக்கப்படும். அவர்களின்செலவுக்குக் காரணமாக இருக்கும் தனிப்பட்ட பெருமைக்கு மட்டுமே உரியன. இவற்றைப் போலல்லாமல் பொன்மலர் வாசனை பெற்ருற்போன்ற அருமைப்பாடுடைய நூலை தமது தாயாரின் நினைவாக வெளியிட்ட பதிப்பாசிரியரை பாராட்டும் அளவில் அமைந்துவிடாது இரு காரியங்களைச் செயற்படுத்துவது அவசியம். இந்நூலைப்பெற்று பயன்படுத்துவது ஒன்று. இவரது செயல் போன்ற பயன்தரத்தக்க மலர்களையே நினைவுமலராக வெளியிடுவதாக உறுதிபூண்டுவாய்க்கும் சந்தர்ப்பங்களில் செயற்படுத்துவது மற்றது.

-அருளாளர்

## 'தலைவர்களை ஒற்றுமைப்படுத்தி

# கூட்டணியை அமைப்பதில் வட்டு. திரு' வெற்றிகண்டார்'

(சுழிபுரம்

''அமரர்திருநாவுக்கரசு மூலமாக ஏற்படுத்தப்பட்ட எங்கள் ஒற்றுமை சிதையாதவாறு காக்கவேண்டியதுதான் நாம் அமரர் திருநாவுக்கரசுவிற்கு செய்யும் அஞ்சலியாகும். தமிழரசு தமிழ்க்காங்கிரஸ் என இரு கட்சிகளாக பிளவுபட்டு எம்மைநாமே பின்தள்ளப்பட்டுக்கொண்டு இருந்தவேளையில் இருகட்சிகளின் பெருந்தலைவர்களான அமரர்கள் ஜீ ஜீ. பொன்னம்டலம், தந்தை செல்வநாயகமிருவரையும் ஒற்றுமையாக்கி தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கி வெற்றி கண்டார் அமரர் தின் நாவுக்கரசு''

எதிர்க்கட்சி மூதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம் பண்ணுகம் இளம் விவசாயிகள் கழகம் அமரர் திருநாவுக்கரசுவின் அஞ்சலிக்கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

பண்ணுகம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் தலைவர் செல்வன் திரு. ஸ்ரீகதமூர்த்தி தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

எதிர்க்கட்சி முதல்வர் திரு. அமிர்தலிங்கம் மேலும் கூறியதாவது:

பாராளுமன்ற உறுப்பினராக வந்துவிட்டால் பல்லுக்குப்பதமாகப் பலர் பேசிக் சொள்வதை நான் அறிவேன். சுகபோகம் எல்லாம் கிட்டிவிடும் என்றெல்லாம் பேசுவர்கள். அமரர் திருநாவுக்கரசு எம். பி. பதவியைப் பெற்றதினல் தமது தொழில் வாய்ப்புக்களை இழந்தார். தம்மிடமிருந்த செல்வத்தைத் தான் தருமம்செய்தார். வேண்டியவர்களுக்கு வழங்கினுர். இதன்மூலமாக அதிக இழப்பை அடைந்தார், நான் ஒருதடவை மட்டும்தான் வைத்தியசாலை செல்லவேண்டிய நிலமை ஏற்பட்டது. அதுவும் தவர்க்கமுடியாத காரணங்களால் எனக்குச் சிறு சிறு நோய்கள் ஏற்படும்போது அமரர் திருநாவுக்கரசு நோய்க்கு ஏற்ற மருந்துகளை வாங்கி வந்து தருவார் நான் அவற்றைப்பாவிக்காது விட்டுவேன் என்பதை அறிந்து இரண்டு தினம் கழித்து வந்து மருந்து முடிந்துவிட்டதா என்று கேட்பார் எனது வருத்தம தமது வருத்தமாகக் கருதுபவர். இயக்கம் டணிக்கும் கட்டளையைச் செயல்படுத்தி வாழ்ந்துவந்தார்.

யாழ். மாநகர முதல்வர் திரு. இராசா விசுவநாதன் பேசுகையில் கூறியதாவது; தமிழ்பேசும் இனம் தமிழ்ஈழத்தில் சிறப்போடு வழவேண்டுமென்று அமரர் திரு பாடுபட்டார். நாம்யாவரும் ஒற்றுமையாக வாழ்ந்து தமிழீழத்தையடைவோம் எமது நோக்கு தமிழ் ஈழமே. கட்டுப்பாடு கண்ணியமாக வாழ்வோம்.

பண்டிதர் ப. இராசகுரு, பண்டிதர் அ. ஆறுமுகம், திரு. நாக. பத்மநாதன், திரு. வி. குகலிங்கம், திரு. ஆ. பஞ்சாயுதன், எஸ். கணேசமூர்த்தி உட்பட மற்றும் பலர் பேசினர். (க)

## குடிநீர் இல்லை

(வவுனியா)

வவுனியா நகரில் குடி நீருக்குப் பெரும் தட்டுப்பாடுநிலவுகின்றது.

நீண்டகாலமாக நிலவிவரும் வரட்சியே இதற்குக்காரணமாகும்.

வவுனியா பஸ் நிலையத்தில் பிரயாணிகள் குடிப்பதற்கு நீர் இல்லாது பெரும் அவதிப்படுவதைக் காணமுடிகின்றது.

நெருக்கடியான இத்தில் அமைந்துள்ள வவுனியா தற்காலிக பஸ் நிலையத்தில் பிரயாணிகள் நிற்பதற்கோ. இருப்பதற்கோ இடமில்லாது பெரும் கஷ்டப்படுகின்றனர்.

தூசிநிறைந்த புழுதிக்கோலமாகவே இந்த பஸ் நிலையம் காட்சியளிக்கின்றது. (இ)

## சித்தவைத்திய அபிவிருத்திசபை

[வேலணை]

யாழ். மாவட்டத்தில் உள்ள சித்தவைத்தியர்களின் திறமைகளையும், சித்த வைத்தியத்தின் சிறப்பையும் எடுத்துக்காட்டி அவற்றை வளர்ப்பதற்கு சித்தவைத்தியர்கள் ஒன்று சேர்ந்து சபை ஒன்றை அங்குரார்ப்பணம் செய்துள்ளனர்.

சித்தவைத்திய அபிவிருத்தி சபை என அழைக்கப்படும் இதன் நிர்வாகிகளாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

போஷகர்கள்: திரு. சு. நடராசா [யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபைத்தலைவர்], திரு மு. ஆலாலசுந்தரம் [கோப்பாய் எம். பி], திரு எஸ். இராமகிருஸ்ணன் [யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர்], தலைவர். வைத்தியகலாநிதி அ. வி. இராசரத்தினம் [யாழ். சித்த வைத்தியக்கல்லூரி] உபதலைவர்கள் டாக்டர்கள் ஆ. நடராசா [யாழ்-மாவட்டசபை], டாக்டர் ந- இரத்தினசபாபதி [தலைவர் உள்ளூராட்சி மன்ற சி.ஆ வை. சங்கம்)செயலாளர் டாக்டர் இ- கனகலிங்கம் [உள்ளூராட்சி மன்ற சி. அ வை. சங்கச் செயலாளர்] தனதிகாரிடாக்டர் பொ. சண்முகரத்தினம் (யாழ் மாநகர சபை) (இ

## 64,000 புகார்கள் விசாரணை

[கொழும்பு]

கடந்த ஐந்து வருடங்களில் தொழில் திணைக்களம் ஊழியர்களின் 64,000 புகார்களை விசாரணை செய்து நிவாரணத்தைப் பெற்றுக் கொடுத்துள்ளது. (வெ)

## சரக்குக் கப்பல் மூழ்கடிப்பு

அங்காரா, செப் 7

வளைகுடாவில் இடம்பெற்ற ஈராக்கிய தாக்குதலின்போது துருக்கியின் சரக்குக் கப்பல் ஒன்று மூழ்கடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது

இதனுல் அக்கப்பலிலிருந்த மாலுமிகள் 3பேர் பலியானதாகவும், 4 பேர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (வெ)

## வருவாய் அதிகரிப்பு

[மன்ஞர்]

தலைமன்ஞர் சுங்க இலாகாவின் நாளகந்தவருவாய்கடந்த இரு மாதங்களில் பல மடங்காக அதிகரித்துள்ளது.

இந்தியாவிலிருந்து வரும், போகும் பிரயாணிகள் எடுத்துச்செல்லும் பொருட்களுக்குத் தீர்வை வரி விதிப்பதன் மூலமே தலைமன்ஞர் சுங்க இலாகாவின் வருவாய் பல மடங்காக அதிகரித்துள்ளது.

## அரபு உச்சிமாநாடு

லண்டன், செப். 7

அரபுநாடுகளின் உச்சி மாநாடு இன்று மொரோக்கோவில் ஆரம்பமானது. இம் மாநாட்டை மொரோக்கோ மன்னர் ஹசன் ஆரம்பித்து வைத்தார்.

இம்மாநாட்டில் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் பற்றி ஆராயப்படவுள்ளது.

# வடஇலங்கை சங்கீதசபை பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

வட இலங்கை சங்கீதசபை நடாத்திய 82-ம் ஆண்டு சங்கீதப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. இப்பெறுபேறுகள் தொடர்ந்து 'ஈழநாடு' இதழில் வெளிவரும் சங்கீதம் முதலாம், இரண்டாம் பகுதி முடிவுகள் இங்கு தரப்பாடுகின்றன.

## மூன்றும் பகுதி
## வவுனியா
### முதலாம் பிரிவு

o தெய்வசக்தி தெய்வதவபாலன் பாட்டு, கல்யாணசுந்தரக்குருக்கள் இராமநாதன் (மே பா) வயலின், o இரமா அம்பலவாணபிள்ளை f பாட்டு, வயலின், o ஸ்ரீ வதனி தாமோதரம்பிள்ளைபாட்டு, o கார்த்திகேயினி சபாரட்ணம் பாட்டு, o f ஜெயகோபி சுப்பிரமணியம் பாட்டு, o f உஷா தாமோதரம்பிள்ளை பாட்டு, o கெங்காதேவி சண்முகலிங்கம் பாட்டு.

### இரண்டாம்பிரிவு

சந்திரவதனி சந்திரசேகரம் வயலின், o அருந்ததி பொன்னம்பலம் பாட்டு.

### சாதாரணசித்தி

கலாதேவி பரமநாதன் பாட்டு, தயாநந்தி தம்பிராசா வயலின்.

## நான்காம் பகுதி
## கொழும்பு
### முதலாம் பிரிவு

கணேஸ்வரி சிவசம்பு மே] பா.] பாட்டு.

### இரண்டாம் பிரிவு

f ஜானகி நடராசா பாட்டு, f காயத்திரி அருணுசலம் பாட்டு, f சசிலேகா பரராஜசிங்கம் பாட்டு, சந்திரசி சிவதாசன் பாட்டு, சிவசுப்பிரமணியம் சிவசங்கரன் பாட்டு, சாந்தி சந்தசாமி பாட்டு.

## நான்காம் பகுதி
## கொழும்பு
### சாதாரணசித்தி

கார்த்தியாயினி சுப்பிரமணியம் பாட்டு, வதனு சிவகுரு புல்லாங்குழல், துரைராசா சாந்தகுமார் புல்லாங்குழல், சந்திரதி சிவதாசன் புல்லாங்குழல், வனஜா துரைரட்ணம் வீணை, கௌ ஆனந்தவல்லி சிவபாதசுந்தரம் வீணை, f ஸ்ரீ இரசாலிங்கம் பிரகலாதன் வீணை, சாந்தி சிற்சபேசன் வீணை, சிவானதி செல்வநாயகம் பாட்டு, சசிகலா சண்முகசுந்தரம் வயலின், கேதீஸ்வரி சிற்றம்பலம் வயலின், சிவகௌரி கந்தசாமி வயலின், பவானி விக்னராசா வீணை, ஆனந்தலக்சுமி ஞானலிங்கம் பாட்டு, சுலஜனி பரநிருபசிங்கம் பாட்டு, அருட்செல்வி வடிவேற்பிள்ளை பாட்டு, கௌரி சணநாதபிள்ளை வீணை, f சகிலா தட்சணமூர்த்தி வீணை. பாமினி பரராஜசிங்கம்பாட்டு, ஏஞ்சலின் ஜெயராஜா பாட்டு, பத்மினி நாகலிங்கம் வீணை, சுபோதினி ரூபசிங்கம் பாட்டு, அனித்திகா ஜெயபரி கருணனந்தராஜா வீணை.

## நான்காம் பகுதி
## கண்டி
### சாதாரண சித்தி

ஞானம்பிகை அப்பாசாமி சர்மா பாட்டு.

## நான்காம் பகுதி
## திருகோணமலை
### முதலாம் பிரிவு

f அனுஷியா நந்தீவீரகுலரட்ணம் பாட்டு, f பவானிதேவி காளிராசா பாட்டு, o கலாதேவி தாமோதரம்பிள்ளை வீணை, f ரௌத்திரி ஜெகசோதி வீணை.

### இரண்டாம் பிரிவு

o லிங்கேஸ்வரி சிவக்கொழுந்து பாட்டு, சுவந்தி தியாகராசா பாட்டு, செல்வராணி மாணிக்கம் பாட்டு, புஷபலதா சித்திரவேல் பாட்டு, உமாசிலகுமாரி குகதாசன் பாட்டு, f விஜயலக்ஷ்மி தனபாலசிங்கம் பாட்டு, வத்சலா ஆத்மலிங்கம் பாட்டு, f மீரா சோமங்கலி சோமகேசன் பாட்டு, f சோபினி கைலைவாசன் பாட்டு.

### சாதாரண சித்தி

f இராஜலட்சுமி இராசையா வயலின், ரேணுகாதேவி இராமச்சந்திரன் பாட்டு, சாந்தசொரூபி நாகராஜா பாட்டு, தயாளினி சண்முகசுந்தரம் பாட்டு, விஜயலக்ஷ்மி தனபாலசிங்கம் வீணை, நவசக்தி நவரட்ணம் வீணை சுபோதினி குமரகுரு பாட்டு, கிருஷ்ணகுமாரி குகதாசன் வீணை, கிருஷ்ணஜோதி அல்மெய்டா வீணை.

## நான்காம் பகுதி
## மட்டக்களப்பு
### இரண்டாம்பிரிவு

f நாராயணதாஸ் கோபதிதாஸ் வயலின், இந்துமதி இராசநாயகம் வயலின், சூரியகுமாரி தேவசேனுதிபதி வீணை.

### சாதாரணசித்தி

சுகிர்தா சுந்தரலிங்கம் பாட்டு, இசபெல்கிருசாந்தினி ஸ்ரீபன்ஸ் வயலின், பத்மதர்சினி பத்மநாதன் வீணை, சுசிலா சிவஞானசுந்தரம் பாட்டு, அனுசூயா சிவஞானசுந்தரம் வயலின், வாணி நவரத்தினராஜா வயலின்.

## நான்காம் பகுதி
## யாழ்ப்பாணம்
### முதலாம்பிரிவு

f கேஷினி சிவப்பிரியாடாஸ் பாட்டு, கார்த்திகா குமாரசாமி பாட்டு, f கார்த்திகா குமாரசாமி வயலின், 0 f திருமகள் குருநாதன் பாட்டு, 0 திருமகள் குருநாதன் வீணை, 0 சாந்தாதேவி வேலுப்பிள்ளை வீணை, 0 சர்வலோகேஸ்வரி சிவானந்தன் பாட்டு.

### இரண்டாம்பிரிவு

உத்தரை இரத்தினசபாபதி பாட்டு, ஹேமமாலினி பாலகுமார் வீணை, தேவகி குகதாசன் பாட்டு, டாஸ் பாலசங்கர் பாட்டு, மஞ்சுளா விக்னேஸ்வரன் வீணை, சிவகலாநிதி பாலசுந்தரம் வீணை, ஆஞ்சியாமா அகஸ்ரின் வயலின், ஆனந்தி இரத்தினசபாபதி பாட்டு, 0 கௌரி கந்தையா வயலின், f ராதிகா கருணைகரன் வீணை, f சுபாஷினி சண்முகலிங்கம் வீணை, f சாமினி அற்புதானந்தா வீணை, குமுதினி திருநாவுக்கரசு பாட்டு, வயலின், மதிமாலா அமிர்தநாயகம் வயலின், கௌசல்யா சுந்தரம்பிள்ளை வயலின், குகனேஸ்வரி வடிவேலு வீணை.

### சாதாரண சித்தி

கோசலா பொன்னம்பலம் பாட்டு, தயாபரி செந்தில்நாதன் வீணை, சசிகலா அரிஹரசர்மா பாட்டு, வயலின், நளாயினி பொன்னுத்துரை பாட்டு, நாவுக்கரசி விஜயரட்னம் பாட்டு, பிரியதர்சினி விசுவநாதன் பாட்டு, இசைவாணி சிவசொருபநாதபிள்ளை பாட்டு, ராஜினி அருணசலம் பாட்டு.வயலின், செல்வராணி நாகேந்திரா பாட்டு, வயலின். ஜெயஸ்ரீ தில்லையம்பலம் பாட்டு, ஜெயமலர் தில்லையம்பலம் பாட்டு, ஐசிந்தா சின்னத்தம்பி பாட்டு, எழினி சந்திரசேகரம் பாட்டு, ராதிகா சுப்பிரமணியஐயர் பாட்டு. ஸ்ரீராதா சிவசுப்பிரமணியம் பாட்டு, ஷீலாதேவி சங்கரன் வீணை, மீனு சிவராஜா பாட்டு, கல்பனு சிவராஜா பாட்டு, முத்துராணி ரமணி நவரத்தினராசா பாட்டு, கேமா சோமசுந்தரம் வீணை, கலிஸ்ர விஞேதினி செல்வரட்னம் பாட்டு, தேவா குணநாயகம் பாட்டு, சசிகலா கீர்த்திசிங்கம் பாட்டு, சிவபதி அருணுசலம் பாட்டு, கீதாஞ்சலி வேலுப்பிள்ளை பாட்டு, தனலட்சுமி தம்பிநாதன் பாட்டு, வயலின், ஜெயசிறி செல்வநாயகம் பாட்டு, சக்தி செல்வநாயசம் பாட்டு, சாமினி அற்புதானந்தா பாட்டு, முத்துக்குமாரசாமி சநாலோகிதசிவா வயலின் சாந்தகுமாரி பொன்னையா வீணை, சிவநிதி சுப்பிரமணியசிவம் பாட்டு, மற்றில்டா ஞானப்பிரகாரம் பாட்டு, f நேசமலர் சரவணமுத்து பாட்டு, சிவரஞ்சனி சிவலிங்கம் பாட்டு, லீலாவதி முருகேசு பாட்டு, f நடராஜன் நரசிம்மன் பாட்டு, திலகசக்தி முத்துக்குமாரசாமி வயலின், தாரணி ஜெயரத்தினம் பாட்டு விஜயலக்ஷ்மி சதாசிவம் பாட்டு, சகோதரி ஜோசலின் மேரி ராஜரட்னம் வீணை, குமாரி தமயந்தி சோமசேகரம் வீணை, காயத்திரி கணேசநாதன் பாட்டு, சுமதி குமாரசாமி வீணை, குமாரசாமி சுதாகர் புல்லாங்குழல்.

[தொடரும்]

## வடமராட்சிப் பகுதி
# மீனவர் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த நடவடிக்கை

(புலோலி)

வடமராட்சிப் பகுதி மீனவர்களின் மீன்பிடி நடவடிக்கைகளை துரிதப்படுத்தி அவர்களது வாழ்க்கைத் தரத்தை வளம்படுத்துமுகமாக பருத்தித்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் மூன்று சங்கங்களாகப் பிரிக்கப்படவுள்ளன.

பருத்தித்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் சங்கத்தலைவர் திரு. எட்வேட் சந்திரன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்படி பருத்தித்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கம் வல்வெட்டித்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்என மூன்றுகப்பிரிக்கப்படவுள்ளது.

வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின்கீழ் மணற்காடு குடத்தனை, நாகர்கோவில் ஆழிபுரப் பகுதிகளும், வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் பொலிகண்டி, சக்கோட்டை இன்பருட்டி, சுப்பர் மடம், பருத்தித்துறை, மூர்சகம், கற்கோவளம் பகுதிகளும் வல்வெட்டித்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் சரவெட்டி, தொண்டமானுறு, வல்வெட்டித்துறைப் பகுதிகளும் அடக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை இப்பகுதிகள் யாவும் பருத்தித்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் கீழேயே இயங்கியமையினுல் மீனவர்கள் பலத்த கஷ்டமனுபவித்து வந்தனர் இடபோது இப்புதிய திட்டத்திற்கமைய இப்பகுதி மீனவர்களின் நடவடிக்கைகள் இலகுபடுத்தப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. இப்புதிய மூன்று கடற்றொழில்ாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் இயக்குநர்சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

## லயன்ஸ்கழக பொருட்காட்சி

[சாவகச்சேரி]

வலுவிழந்தோர் இல்ல நிதிக்சாக சாவகச்சேரி லயன்ஸ் கழகம் நடத்தும் பொருட்காட்சியையும் களியாட்ட விழாவையும் நாளாந்தம் பெரும்பாலான மக்கள் கண்டுகளித்து வருகின்றனர்.

இக் கண்காட்கியில் பனம் பொருள் அபிவிருத்தி சபையின் காட்சி அறை, மருத்துவப்பகுதி காட்சி அறை ஆகியன முக்கிய இடம் பெறுகின்றன. இறந்த மனிதனின் சடலத்தையும் மருத்துவப் பகுதியினர் இக் கண்காட்சியில் வைத்துள்ளனர்.

பயங்கர மோட்டார் சைக்கிள் ஓட்டம், சர்க்கஸ் என் பனவும் பார்வையாளர்களைப் பெரிதும் கவர்ந்துள்ளன.

[கி]

## கனகசெந்திநாதன் நினைவு சிறுகதைப்போட்டி

[யாழ்ப்பாணம்]

இரசிகமணி கனகசெந்திநாதனின் அரை தசாப்த ஞாபகச் சிறுகதைப்போட்டியொன்றை தகவத்தின் ஆதரவுடன் குரும்பசிட்டி சன்மார்க்கசபை நடத்தவுள்ளது.

இப்போட்டிக்குரிய சிறுகதைகள் சமுதாய உணர்வு சிந்தனை அமைத்ததாய் மண்வாசனை வீசுவதாய் அமையவேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

கதைகள் ஐந்து புல்ஸ்காப் பத்திரங்களுக்குக் குறையாது எழுதப்படவேண்டும் என்றும் இது தொடர்பாக நடுவர்கள் தீர்ப்பே இறுதி முடிவாகுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்சிறுகதைப் போட்டியில் முதலாவது பரிசாக 200 ரூபாவும், இரண்டாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படவுள்ளது. இப்போட்டிக்கான முடிவு திகதி அடுத்த மாதம் 15ம் திகதியாகும்.

## மயானம் சிரமதான மூலம் துப்பரவு

(மட்டுவில்)

குடமியன் மயானத்தையும் அதன் கிணற்றையும் நாவற்காடு கிராமோதயசபை சிரமதானமூலம் துப்பரவாக்கியது.

கிராமோதய சபைத் தலைவர் திரு. மு, சின்னத்தம்பி தலைமையில் நடைபெற்ற இச்சிரமதானப்பணியில் அதிகமான தொண்டர்கள் கலந்துகொண்டனர்,

## கோழி வளர்ப்பு ரூ. 200 மானியம்

(மன்னர்)

மன்னர்–பாப்பாமோட்டை கிராமத்தில் கோழி வளர்ப்புக்கு ஊக்கமளிக்கும் பொருட்டு 15 குடும்பங்களுக்கு தலா 200 ரூபாவீதம் மானியம் வழங்கப்படும்.


இதற்கான நடவடிக்கைகளை பாப்பாமோட்டை கிராம அபிவிருத்திச்சங்கம் மேற்கொண்டு வருவதாக கிராம அபிவிருத்தி அதிகாரி திரு. கணேஸ் தெரிவித்தார்.

## மின்கட்டணம் அதிகரிப்பு

(மன்னர்)

'மன்னர் பட்டினத்தில் மின்சாரக் கட்டணம் திடீரெனப் பலமடங்காக அதிகரித்துள்ளதால் மின்சார பாவனையாளர்கள் மிகவும் பாதிப்படைந்துள்ளனர். அதனுல் மன்னர் பட்டினத்தில் மின்சாரக் கட்டணத்தைக் குறைப்பதற்கு உடன் நடவடிக்கை எடுக்கவும்.'

இவ்வாறு கூறும் மகஜர் ஒன்றினை மன்னர் நலன்நோக்குச் சங்கம் ஜனுதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனுவுக்கு அனுப்பி வைத்துள்ளது.



பொலிகண்டி இந்து தமிழ் கலவன் பாடசாலையில் கணித உதவி ஆசிரியராகக் கடமையாற்றும் திரு ஆர். திருநாவுக்கரசு இண்டரை வருடங்களாக எதுவித லீவுமின்றி சேவையாற்றிப் பாராட்டைப் பெற்றுள்ளார். இதற்கு முன்னர் அநுராதபுரம் விவேகானந்த தமிழ் மகாவித்தியாலயத்தில் 4 வருடங்களாக லீவு எடுக்காமல் சேவையாற்றிப் பாராட்டைப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.



[புலோலி]

வடமராட்சி வடக்கு கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு பிரதேசசபைத் தலைவராக சி. மு. கந்தசாமி தெரிவு செய்யப்பட்டுள்ளர்,

பருத்தித்துறை தும்பளை நெல்லண்டை அம்பாள் ஆலய பரிபாலன சபைத் தலைவரும், இலங்கை குடும்பத்திட்ட சங்க தும்பளை மாதிரிக்கிராம அபிவிருத்தி நிதிக்குழுத் தலைவரும், நோர்வே தும்பளை அபிவிருத்தி மன்றப் பணிப்பாளருமான திரு. கந்தசாமி அநுராதபுரம் கதிரேசன்கோவில் பரிபாலன சபைத் தனுதிகாரியாகவும், வவனியா கந்தசுவாமி கோவில் பரிபாலன சபை உறுப்பினராகவும், பருத்தித்துறை நகரசபை உறுப்பினராகவும் பணியாற்றியவர். தற்போது சமூகசேவையில் அதிக நாட்டம் கொண்டு செயற்பட்டுவரும் இவர் பருத்தித்துறைத்தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணியின் முக்யகிபிரமுகர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## முதிரைப்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா குடியிருப்பைச் சேர்ந்த சுப்பிரமணியம் ரஞ்சன், இராசன் தேவதாஸ் ஆகிய இருவரும் 55 முதிரைப் பலகைகளை செங்கட்டிகளால் மறைத்துக் கடத்திய குற்றத்திற்காகவே மேற்படி தண்டனை விதிக்கப்பட்டது.

இவ்வழக்கு சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி எம். எச். காரியப்பர் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது.

# தாய்ச்சங்கம் மீது கண்டனம்

[வவனியா]

அகில இலங்கை தபால்தந்தி ஊழியர் சங்கத்தின் வவனியா கிளை பொதுச் கூட்டம் வவனியா தபால் கந்தோர் அறையில் நடைபெற்றது.

சங்க உபதலைவர் திரு நடராசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில்யாழ்ப்பாணம் தாய்ச்சங்க பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். தபால் தந்தி ஊழியர்கள் சேவை விஷயத்தில் தாய்ச்சங்கம் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றுஉறுப்பினர்கள் குற்றம் சாட்டினர்கள்.

கடந்த பல வருடங்களாகத் தேங்கிக்கிடந்த ஊழியர் நியமன விஷயத்திலும், சிங்களத் தேர்ச்சி இல்லாத ஊழியர்களுக்கும் நிவாரணம் பெறக்கூடிய அளவில் சகல ஊழியர்களுக்கும் நியமனம் பெற்றுக் கொடுக்க முன்நின்றுஉழைத்த அதிகாரி திரு சி. என். மரியதாஸுக்கு பாராட்டுத் தெரிவிக்கும் முகமாக பிரேரணை ஒன்றும் கூட்டத்தில் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இவ்வருட புதியநிர்வாகிகள் விபரம் வருமாறு: தலைவர் திரு எம். எஸ். நடராசா, செயலாளர் திரு எஸ். இராசையா, தனாதிகாரி திரு எஸ். சிறீதரபாலன். நிர்வாகக்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

# சங்கிலி அறுத்தவர் பிடிபட்டார்

(சாவகச்சேரி)

யாழ்ப்பாணம் – கொழும்பு மெயில் புகையிரத வண்டியில் நாவற்குளி புகையிரத நிலையத்திற்கும் சாவகச்சேரிக்கு மிடையில் சிவசம்பு நாகமுத்து என்பவருடைய 2,500 ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியை ஒருவர் அறுத்தபோது பிரயாணிகளிடம் கையும் மெய்யுமாகப் பிடிபட்டார்.

சாவகச்சேரி புகையிரதநிலையத்தில் ஒப்படைக்கப்பட்ட இவர் சாவகச்சேரிப் பொலிசாரிடம் பின்னர் கையளிக்கப்பட்டார்.

சந்தேகநபரான கோவிந்தன் தம்பிராசா என்பவரை பொலிசார் சாவகச்சேரி நீதிபதி ஜனுப் எம் எச். காரியப்பர் முன்னிலையில் ஆஜர் செய்தபோது, நீதிபதி, இம் மாதம் 13-ந் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (கி)

## தேவாலயஉற்சவம்

[கரவெட்டி]

முகமாலை அன்னை வேளாங்கண்ணி மாதா தேவாலய வருடாந்த உற்சவம் இம்மாதம் 10 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

ஒன்பது தினங்கள் தினசரி திருப்பலிப் பூசை ஆராதனையுடன் நடைபெறும் இவ் உற்சவம் 19 ம் திகதி காலை இடம்பெறும் கூட்டுப்பலிப்பூசை, திருச்சொரூப பவனி ஆகியவற்றுடன் நிறைவு பெறும்.

## 40 மைல் சைக்கிளோட்டப் போட்டி

[மட்டுவில்]

வடமாகண ரீதியிலான 40 மைல் ஆண்கள் சைக்கிளோட்டப் போட்டியில் பங்கு பற்றிய சுமார் நூறுக்கும் அதிகமான சைக்கிளோட்டவீரர்களில்அளவெட்டி வாணி விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த பொ. வரதராஜா முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

வடமாகணரீதியிலான ஆண்கள் 40 மைல் சைக்கிளோட்டப்போட்டி தென் மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையத்தின் 17 வது ஆண்டு பூர்த்தி விழாவை முன்னிட்டு நடைபெற்றது.

இப்போட்டியில் இரண்டாம் இடத்தை சுன்னாகம் சூராவத்தையைச் சேர்ந்த வி. நகுலேஸ்வரனும், மூன்றும் இடத்தை ஆனைக்கோட்டையைச் சேர்ந்த ஐ தில்லைத்தேசிகனும் பெற்றுக் கொண்டனர்.

இதற்கான பரிசில்களை வளர்மதி அரங்கில் வைத்து சாவகச்சேரி எம். பி திரு. வி. என். நவரத்தினம் வழங்கினர்.

## கோலப்போட்டி

[யாழ்ப்பாணம்]

சைவமகளிர் மன்றம் நவராத்திரி விழாவை முன்னிட்டு அடுத்த மாதம் கோலப்போட்டியொன்றை நடாத்த விருக்கிறது.

# கிராமோதய சபை அழியாத தீர்மானம்

[மன்னர்]

தலைமன்னர் கிராமோதய சபைக் கூட்டத்தில் அரசாங்க அலுவலர்களும் கலந்துகொள்வதற்கு ஏற்றவாறு நடவடிக்கை எடுக்கவும்.

இவ்வாறு மன்னர் அரசாங்க அதிபர் திரு டி. வாமதேவனையும், மன்னர் அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. பி எம். செபமாலையையும் கோருவதென்று தலைமன்னர் கிராமோதய சபைக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

தலைமன்னர் கிராமோதய சபைத்தலைவர் திரு. அல்பிறட் சில்வா தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

தலைமன்னர் கிராமோதய சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு உரியமுறையில் அறிவித்தல் கொடுத்தும் தலைமன்னர் கிராம சேவை அலுவலரைத்தவிர வேறெந்த அரசாங்க அலுவலரும் துவரை ஒரு கூட்டத்திலும் கலந்து கொள்ளவில்லை. எனவே இது குறித்து உடன் நடவடிக்கை எடுக்குமாறும் அத்தீர்மானத்தில் கேட்கப்பட்டுள்ளது. இ/

[4-ம் பக்கத் தொடர்ச்சி

சமூக வேதனைகளை கலை வடிவங்கள்மூலம் மக்கள் மத்தியில் முன்வைப்பதும் எழுத்தாளன் கடமையாகும். எழுத்தாளன் தனது ஆக்கங்களை நூல்வடிவில் கொண்டுவர பல இன்னல்களை அநுபவிக்க வேண்டியிருக்கிறது. விமர்சகர்கள் பலர் பொருமை கண்ணேட்டத்தில் சாடுவர். இளம் எழுத்தாளர் என்றும் முது எழுத்தாளர் என்றும் தரம்பிரித்து மட்டம் தட்டுதல் நடைபெறும். எழுத்தாளர்களுக்கு ஊக்கம் அவசியம். இதுபோன்ற கலை இலக்கிய ஆர்வலர் ஒன்றியங்கள் எழுத்தாளர்களது ஆக்கங்களை அறிமுகம் செய்து உந்தி நிற்றலை நற்பணி என்பேன்'' என் எழுத்தாளர் காவலூர் திரு எஸ். ஜெ நாதன் குறிப்பிட்டார்.

சிலோன் விஜயேந்திரன், திரு. வி. தனேஸ்வரன் உட்பட பலா கலந்துரையாடலில் பங்கு கொண்டனர்.

நன்றி கூறிய திரு. ஏ ரி. பொன்னுத்துரை இரண்டாவது சந்திப்பு காங்கேசன் துறையில் அவ்விடத்து கலை இலக்கிய ஆர்வலர் தலைமையில் விரைவில் நிகழும் என குறிப்பிட்டார்.

## ஈட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

ஈடு / 1466 இலக்க வழக்கில் வாதி யாழ்ப்பாணம், குருநகர், பறங்கித்தெரு, இறக்ஸ்ரஸ் லுடிக்கன்சுஸ்கு போகவேண்டிய தீர்வைத் தொகை: 6150/- ரூபாவும், மேலும் இதில் 5000/- ரூபாவுக்கு 2?-10-80 தொடக்கம் 30-7-81வரை வருடமொன்றுக்கு 24% வீத வட்டியும் அதன்பின் சேர்ந்த முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை வருடமொன்றுக்கு 5% வட்டியும் வழக்குச் செலவு ரூபா 2138-55 சதமும் விற்பனவுச் சலார்களும் இத்தொகையை பிரதிவாதிகள் அல்லைப்பிட்டி 2-ம் வட்டாரம் 1 அரியகுட்டி இராசதுரையிடமும், 2. பெண் அல்வினம்மாவிடமும் அறவிடுவதற்காக எனக்களித்த அதிகாரத்தின்படி வழக்கில் சம்பந்தப்பட்ட கீழ் விபரிக்கப்படும் ஆதனம் 1982 ஒக்ரோபர் 7ம்திகதி [7-10-82] முற்பகல் பத்து மணி தொடக்கம் அவ்வாதனத்தில் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### குறித்த ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் தீவுப்பகுதி அல்லைப்பிட்டி கோவிற்பற்று அல்லைப்பிட்டி இறை ''நெடும்பிட்டி'' நில. பர. 4, குளி 15துடன் 23/152 வீடும், பனைகளும் வடலிகளும். இதற்கெல்லை கிழக்கு; நீக்கிலாப்பிள்ளை ஞானப்பிரகாசத்திற்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். வடக்கு; சூசை அந்திரேசுக்கும் பெண் லூசனுவுக்குமுரிய ஆதனம், மேற்கு: நீக்கிலாப்பிள்ளை யாக்கோபுவுக்கும் சிதம்பரப்பிள்ளை குழந்தை வேலுவுக்குமுரிய ஆதனங்கள். தெற்கு: சிதம்பரப்பிள்ளை குழந்தைவேலுவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். இதடங்கலும்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
விற்பனை ஆணையாளர்,
ஏலவிற்பனவாளர்.

''இராசகிரி'',
643, கே கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

4455

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

# கேள்வி அறிவித்தல்

மக்கள் மாதிரிச் சந்தையின் 2-ம் கட்டத்தின் முதலாம் மாடியில் அமைந்துள்ள மத்தியகூடமும் முற்றவெளிச சந்தைக்கு வடக்குப் பக்கமாக அமைந்துள்ள கடை அறையும் ஐந்து வருடங்களுக்கு குத்தகைக்குக் கொடுப்பதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 16-9-1982—ம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12-00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் படிவங்கள் 14-9-82ம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12-00 மணிவரைஅவற்றிற்குரிய கட்டணங்களையும், பிணைப்பணத்தையும் செலுத்துவதன் பேரில் யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தினல் வழங்கப்படும் படிவங்களில் இருபிரதிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

2. கடை அறை, கூட விபரம்:

| குத்தகை விபரம் | மாத வாடகை | கேள்விப் படிவக்கட்டணம் | கேள்விப் பிணை |
|---|---|---|---|
| 1. நவீனசந்தை 2-ம் கட்ட மேல்மாடி மத்தியகூடம் 1282 ச. அடி. | 1915/- | 50/- | 1000/- |
| 2. முற்றவெளி சந்தைக் கடை | 50/- | 50/- | 500/- |

மேலதிக விபரங்களை மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

சீ. வீ கே. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
27-8-82

4461

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி: 6-15, 9-30
சனி, ஞாயிறு 2-30
கமலஹாசன்
உல்லாசப்பறவைகள்

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சரத்பாபு – சுபாஷினி
நெஞ்சத்தை கிள்ளாதே
(கலர்)

ராஜா (யாழ் நகர்)
4 காட்சிகள்
பிரதாப்-ராதிகா
வசந்தத்தில் ஒரு வானவில்
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன்
[யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
ஆயிரம்வாசல் இதயம்

லிடோ தினசரி 4 காட்சிகள்
[யாழ்ப்பாணம்]
பெற்ற மனம் பித்து

றீகல் Daily 5 Shows
[யாழ்.நகர்]
JOE LOUIS in
Jaguar Lives

சாந்தி யாழ்.நகர்]
8—10
தினசரி 5 காட்சிகள்
PETER CUSHING in
Twins of Evil
(Terror–Adults–Color)

ஸ்ரீதர் (யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்-மஞ்சுளா-லதா
நேற்று இன்று நாளை

ராணி (யாழ் நகர்) 9வது வாரம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-சுஜாதா-ஸ்ரீதேவி
விஸ்வரூபம்
[ஈஸ்ட்மன் கலர்]

இன்று மட்டும்
மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
கார்த்திக் - ராதா - தியாகராஜன்
அலைகள் ஓய்வதில்லை (கலர்)

4-வது வாரம்
வின்ஸர் தினசரி 4 காட்சிகள்
(யாழ்.நகர்)
ஐந்து இளைஞர்களும், ஐவகை ஆயினும் ஆருயிர் நண்பர்கள் ஒவ்வொருவருடைய தனி வாழ்க்கையும் ஒருவகைப் பாலைவனம். இவர்களின் வாழ்வில் அழகும் இளமையும் எளிமையும், தூய்மையும் பரந்தநோக்குமுடைய பெண்ணொருத்தி வருகிருள். ஐவருக்கும் அவளில் ஒரு கண். அவளோ ஐவரிலும் ஒரு வகையான அன்பையே வைத்திருந்தாள். முடிவை அறியவெண்திரை விடையளிக்கும்.
பாலைவனச்சோலை
(கலர்)

## யாழ். சித்தவைத்தியக் கல்லூரி:

# நம்மவர்கள்தான் தடையாக இருக்கின்றனர்!

## 'அமிர்' கவலை

(யாழ்ப்பாணம்)

''சித்தவைத்தியக் கல்லூரி யாழ்ப்பாணத்தில் இயங்குவதற்கு நம்மவர்களே தடையாக உள்ளனர்'' என்று எதிர்கட்சி முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம், அகில இலங்கை சித்தவைத்திய அபிவிருத்திச் சங்கத்தை குத்து விளக்கேற்றி ஆரம்பித்து வைத்துப்பேசுகையில் தெரிவித்தார்.

சித்த வைத்தியக் கலாநிதி ந. இரத்தின சபாபதி தலைமையில் யாழ் லங்கா சித்தாயுர்வேத கல்லூரி மண்டபத்தில் இந்த அங்குரார்ப்பணக் கூட்டம்நடைபெற்றது. எதிர்க்கட்சி முதல்வர் திரு அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:

தமிழரது தனித்துவமான வைத்தியம் சித்தவைத்தியம் தமிழரின் சொந்த வைத்தியத்தை அபிவிருத்தி செய்யவென இயங்கஉள்ள இச் சபையை ஆரம்பித்து வைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். யாழ்ப்பாணத்தில் பல வைத்தியசங்கங்கள் காணப்படுகின்றன சுமார் 22வருடங்களுக்கு முன் வட்டுக்கோட்டை சித்த வைத்தியர் குமாரசாமியின் தலைமையில் இயங்கிய சங்கக் கோரிக்கைக்காக நான் 1957 ஆண்டளவில் சித்தவைத்தியக் கல்லூரி சித்தபாகசாலை, சித்தவைத்தியசாலை யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட வேண்டும், எனப்பாராளுமன்றத்தில் குரல் எழுப்பியதன் பலனாக கைதடியில் சித்த வைத்திய கல்லூரி ஆகியவற்றுக்கு கட்டிடங்கள் கட்டப்பட்டன.

''கைதடியில் அமைந்துள்ள கட்டிடத்தில் சித்தவைத்தியக் கல்லூரி விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கைகளை மாவட்ட சபை மேற்கொண்டு வருகின்றது. இது பல்கலைக்கழக அந்தஸ்தை நாளடைவில் அடையும் யாழ் பல்கலைக்கழகத்தினரும் இதனை கொள்கையளவில் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

''பரராசசேகரன், செகராசசேகரம், போன்ற யாழ்ப்பாண மன்னர்கள் சித்தவைத்தியத்தை நன்கு வளர்த்தவர்கள். இன்று இவ் வைத்திய ஒன்றியமைக்க காரணம், தரமான மருந்துகள் வைத்திய முறைகள் இல்லாததேயாகும்.

''சித்த வைத்தியத்தை வளர்க்க என்னாலான உதவிகளைச்செய்வேன். ஏடுகள் தேடப்பட்டு பாதுகாத்துவைக்கப்பட வேண்டும், சித்தவைத்திய சம்பந்தமான ஆராய்ச்சிகள் நடைபெறவேண்டும் இதன் மூலம் சித்தவைத்தியத்தைமுன்னேற்றமுடியும். சித்தவைத்திய கலாநிதி பொ. சண்முகரட்ணம் பேசுகையில்: சித்தவைத்தியத் துறைக்கு எதிர்க்கட்சி முதல்வர்எடுக்கும் முயற்சிகளுக்கு நன்றி தெரிவித்தார்.

மற்றும் சித்தவைத்திய கலாநிதிகள் இ. கனகலிங்கம், க. பாலசுப்பிரமணியம் ஆகியோரும் உரைநிகழ்த்தினர். (மா)

## கிராமோதய சபைத் தலைவர்கள் சம்மேளனம்

[மன்னார்]

மன்னார் மாவட்ட கிராமோதய சபைத் தலைவர்கள் சம்மேளனம் ஒன்று இம்மாதம் 1ம் திகதி அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும்.

இதற்கான நடவடிக்கைகளை மன்னார் கிழக்கு கிராமோதய சபைத் தலைவர் திரு. பி. சிந்தாத்துரை மேற்கொண்டு வருகிறார். [இ]

## அபிவிருத்தி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

### 'அடையாள அட்டைகள்''

அத்தனகலை எம். பி. திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி பேசுகையில் கூறியதாவது:

கிராமோதய சபை அங்கத்தவர்களுக்கு அடையாள அட்டைவழங்கப்படவேண்டும் அடையாள அட்டை வழங்குவதன் மூலம் அங்கத்தவர்களை இனம்கண்டு கொள்ளமுடியும் அவர்கள் தமது சேவையைச் சுலபமாக வழங்கவும் முடியும். வேலைத்திட்டங்களுக்கு இன்னும் நிதி ஒதுக்கப்படவில்லை. இவ்வற்றைக் கவனிக்கவேண்டும்.

கல்வி இளைஞர்விவகார அமைச்சர் திரு. ரணில்விக்கிரமசிங்கா திருத்த சட்டமூலத்தை விளக்கினார்.

## இன்று

(யாழ்ப்பாணம்)

காப்புறுதி அபிவிருத்தி'' பற்றிய மாநாடு இன்று காலை யாழ்ப்பாணம் 'பாம்கோட்' விடுதியில் நடைபெறவுள்ளது. இம்மாநாட்டில் அபிவிருத்தி முகாமையாளர் திரு. எஸ், எம். ஏ. வீரசிங்கம் கலந்து கொள்கின்றார். [கெ]

● ● ●

[யாழ்ப்பாணம்]

சுருவில் றோமன் கத்தோலிக்கத் தமிழ்ப்பாடசாலையின் பாடசாலைத்தினமும்பரிசளிப்பு விழாவும் இன்று மாலை அதிபர் திரு. வை. தியாகராசா தலைமையில் நடைபெறவிருக்கிறது வட்டாரக்கல்வி அதிகாரி திரு. பொன் கணேசன், வண பிதா பிரான்ஸிஸ் சேவியர், திரு. க. சுப்பையா ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக்கலந்து கொள்வார்.

## புள்ளடிக்குப்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ருக்கு எதிரில் 1, 2 என்ற முறையே எழுதவேண்டும். மூன்றாவது அபேட்சகருக்கு ஒன்றும் போடத்தேவையிருக்காது.

4 பேர் அல்லது 4 பேருக்கு மேற்பட்டோர் போட்டியிட்டால், ஒரு வாக்காளர் அதில் 3 அபேட்சகருக்கு வாக்களிக்க உரிமையுண்டு. 3 அபேட்சகருக்கு நேரில், 1, 2, 3, என இலக்கமிடவேண்டும்.

வாக்களிப்பு முடிந்ததும், முதலில் 1 இலக்கமிட்டவாக்குகள் எண்ணப்பட்டு அதில் வரும் முடிவு கொழும்பிலுள்ள தேர்தல் ஆணையாளருக்கு உடனடியாக அறிவிக்கப்படும் இதேபோன்று மற்றும் தேர்தல் மாவட்டங்களிலிருந்தும், முடிவுகள் உடனடியாகத் தேர்தல் ஆணையாளருக்கு அறிவிக்கப்படும். மொத்தவாக்குகள் எண்ணப்பட்டு மொத்தமாக இடைத்த வாக்குகளில் 50வீதத்திற்குமேல் ஒரு அபேட்சகர் எடுத்திருந்தால அவர் புதியஜனாதிபதியாகபிரகடனப் படுத்தப்படுவார்.

எவரும் 50 வீத வாக்குகள் எடுக்காவிடில் உடனடியாக, சகல தேர்தல் மாவட்டங்களிலுள்ள தேர்தல் ஆணையாளர்களுக்கும் அறிவிக்கப்படும்.

மீண்டும் வாக்குச்சீட்டுகள் எண்ணப்படும்.

## இப்படியும் நடக்கிறது

வில்லிசையை, எல்லோரும் நினைத்த மாதிரி நிகழ்த்தலாமா?

நவாலிப்பகுதியில் அண்மையில் ஒரு வில்லிசை நிகழ்ச்சி நடந்தது.

வில்லிசையை நிகழ்த்தியவருக்கு சமய அறிவு'சூனியம்'! ஒரேகிண்டலும் கேலியும்தான்! பொருத்தமில்லாத மாதிரி 'செக்ஸ்' வேறு!

ஆத்திரம் கொண்ட இளைஞர்கள் சகிக்கமுடியாமல் கேள்விமேல் கேள்வி கேட்கவே, ஆளைவிட்டால் போதும் என்று நழுவிவிட்டாராம்!

'பண நாய'கனை ஆட்கொள்ள வேண்டுமானால், எப்படியும் நடக்கலாமா?

'ஊடு…'

## கலைஞர்களுக்கு கௌரவம்

[கொழும்பு]

ஜனாதிபதி திரு ஜே ஆர். தலைமையில் கொழும்பு டவர் ஹோலில் வரும் வியாழக்கிழமை கௌரவிக்கப்படுவார்கள்

ஒவ்வொருவருடமும், இந் நாட்டில் பல்துறைகளிலும் பணியாற்றிய கலைஞர்கள் தெரிந்து எடுக்கப்பட்டு விருதுகள் வழங்கப்பட்டு சிறப்பிக்கப்படுவர். ரூ. 10,000 பணமும் வழங்கப்படும்.

வரும் வியாழன் நடக்கும் விழாவில் கௌரவிக்க பத்துக் கலைஞர்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

## பரந்தன்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சங்கத்தின் சார்பில் பொதுச் செயலாளர் திரு. பாலா தம்புவும், சங்க பரந்தன் கிளைச் செயலாளர் திரு. ஜெகநாதனும், இலங்கை அரசாங்கக் கூட்டுத்தாபன ஊழியர் சங்கத்தின் பரந்தன் கிளைச் செயலாளர் திரு. த. சண்முகராசாவும், ஐக்கிய கூட்டுத்தாபன வர்த்தக ஊழியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. பேர்ஸியும், பரந்தன் கிளைச் செயலாளர் திரு. எஸ். இராசரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டு முடிவுஎடுக்கப்பட்டு, ஒப்பந்தத்தில் நிர்வாகமும், தொழிற்சங்கங்களும் தொழில் ஆணையாளர் முன்னிலையில் கைச்சாத்திட்டு ஏற்றுக்கொண்டனர்.

## காந்தீய கிராம சபை

(கரவெட்டி)

கரணவாய் வடக்கில் காந்தீய கிராமிய சபை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. கொற்றையூர் சனசமூக நிலைய மண்டபத்தில் கரணவாய் வடக்கு கிராமோதய சபைத் தலைவர் திரு. ஆ. க. மாணிக்கம் தலைமையில் காந்தீய கிராமியசபை அங்குரார்ப்பணக் கூட்டம் நடைபெற்றது,

கிராமோதய சபைத்தலைவர் திரு. ஆ. க மாணிக்கம் தமது தலைமையுரையில் கூறியதாவது:

காந்தீயம் தமிழ் மக்களுக்கு அதுவும் ஏழை மக்களுக்கு ஆற்றிவரும் தொண்டுகளையும் நிலமில்லாத – தொழில் இல்லாத மக்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கின்றது மேலும் இச் சபை அரசியல் கலப்பில்லாமல் மக்கள் பொருளாதார சமூக முன்னேற்றத்திற்காக உழைக்கின்றது.

கல்வியில் பின்தங்கிய இடங்களில் வாழும் ஏழை மாணவர்களின் கல்வி தொடர்பான விஷயங்களில் முன்னின்று பாலர் பாடசாலைகளை ஆரம்பித்துஇலவசமான கல்வியைப் பெற வாய்ப்பளிக்கின்றதோடு போஷாக்கு நிறைந்த யாவகைகளையும் வழங்குகின்றது கிராமியமட்டத்திலுள்ளமூலவளங்களைப் பயன்படுத்தி அக்கிராம மக்களுக்கு ஏற்ற தொழில் வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்கின்றது''.

## மரண அறிவித்தல்

### - பொன்னையா தயாபரன் -

கொழும்பு கட்டிடத் திணைக்களப் பிரதம பொறியியலாளர் பொன்னையா தயாபரன் காலமானார். இவர் ஜெயவதியின் கணவரும், கஜேந்திரன், கஜேந்தினி, கஜோபன், கஜமுகன் ஆகியோரின் தந்தையும், காலஞ்சென்ற மேவின் சீனித்தம்பி பொன்னையா – திருமதி மீனாட்சி தம்பதிகளின் புதல்வனும், திருமதி தயாநிதி செல்வநாயகம் (யாழ். பல்கலைக்கழகம்), தயாநேசன் (சீபோன் – சீநோர், காரைநகர்), திருமதி தயாரதி சீவரத்தினம் ஆகியோரதும் தர்மபாலன் (சீபோன்), தர்மலீலா (ஆசிரியை), சத்தியபாலன் (U. K.), இரத்தினபாலன் (U. K.), புவனபாலன் (U. K.), ஜோதிபாலன் (U. K.) ஆகியோரதும் சகோதரரும்; அராலி கிழக்கு காலஞ்சென்ற ஓவசியர் விஜயரத்தினம் – திருமதி இராசபாக்கியம் தம்பதிகளின் மருமகனும், விஜயேந்திரன், விஜயகுமார் (பிரான்ஸ்), திருமதிகள் விஜயகுமாரி விக்னராஜா, விஜயசொரூபி மகேந்திரன், விஜயமாலா, விஜயவதனா ஆகியோரதும், காலஞ்சென்ற புவியியல் துறைப் பேராசிரியர் சோ. செல்வநாயகம், எஸ்.வி.பி. சீவரத்தினம் (உரிமையாளர் – கொழும்பு சீவம் எக்ஸ்போர்ட்டேர்ஸ் லிமிட்., யாழ் எஸ் வி. பி. சீவம், காரைநகர் சீபோன் எக்ஸ்போட்டேர்ஸ் லிமிட்), திருமதி நவமணி தயாநேசன் (அரசினர் வைத்தியசாலை, சாவகச்சேரி) ஆகியோரின் மைத்துனரும், ரி. விக்கினராஜா (உரிமையாளர், முருகன் மோட்டோர்ஸ், யாழ்ப்பாணம்), மகேந்திரன் (சவூதி) ஆகியோரின் சகலனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 8-9-82) புதன்கிழமை பிற்பகல் 4-00 மணியளவில் அராலி கிழக்கில் நடைபெறும்.

'இராஜபவனம்', அராலி கிழக்கு.

4472

## மரண அறிவித்தல்

### மாரிமுத்து இராசரத்தினம் (செல்லத்துரை)

கொட்டடியைச் சேர்ந்த திரு. மாரிமுத்து இராசரத்தினம் (பிரபல அரசாங்க ஒப்பந்தக்காரரும், மாக்கற் [Market] குத்தகைக்காரரும்) காலமானார். இவர் கனகாம்பிகையின் அன்புக் கணவரும், யாழ். மீன்பிடிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் ஐஸ் தொழிற்சாலை முகாமையாளர் திரு இராஜாராமின் அன்புத் தந்தையும், புனித சேவியர் கல்லூரி, மன்னார், ஆசிரியை மங்கையற்கரசியின் அன்பு மாமனாரும், இளைப்பாறிய புகையிரதப்பகுதியின் கணக்காளருமான சுப்பிரமணியம், திருமதி தியாகராசா, னகரத்தினம், திருமதி நவரத்தினம், திருமதி சின்னத்தம்பி, நடராஜா, திருமதி சிவஞானசுந்தரம், திருமதி சபாரத்தினம், திருமதி நாகரத்தினம், காலஞ்சென்ற இரத்தினசபாபதி, திருச்செல்வம் ஆகியோர்ன் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 63, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து தகனக் கிரியைக்காக இன்று (8-9-82) பிற்பகல் 4 மணியளவில் வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

4473

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1982 [illegible] செப். 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/81
Elanadu — P. O. Box49 Telegram: 'Eelanadu' T'phone: 389 and 8126.